

சிலம்பு ௨௮	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, வைகாசி ஜூன், 1954	பரல் ௧௦

பெரியபுராணப் பேருரை அரங்கேற்றவிழா

'சைவசமயமே சமயம்' என மெய்ந்நெறிச் செல்வராகிய தாயுமானார் அருளியவாறு உலகிற் சிறந்த சமயங்களில் முதலிடதில் வைத்தெண்ணத்தக்கது நம் சைவ சமயம ஒன்றே.

எதனாலென வினவின், இச் சைவசமயம்

'ஓதுசம யங்கள பொருள்உணரும் நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசம யம்பொருள்நூல் யாதிங் கென்னின்
இதுவாகும் அதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினால் இவையெல்லாம ஓரிடத்தே காண
நின்றதுயா தொருசமயம் அதுசமயம'

(சிவஞானசித்: ௨௯௪)

என்னும் அருணந்திசிவாச்சாரிய அடிகளின் திருமொழிக்கேற்ப எல்லா நெறிகளின் நன்னெறியெல்லாம தன்னகத்தே கொண்டு மிளிரும் பெற்றிமையாலெனக் கூறலாம். இதனால் இது 'திருநெறி' என, ஆன்றோர்களால் போற்றப் பெறுகின்றது.

இச் சைவசமயத்தில் சாதி சமய வேறுபாடு இன்று. 'கங்கை வார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே' என்று தேவாரமறை முழங்குகின்றது. அஃதோடு முழு முதலாகிய இறைவனை இயற்கை நெறிகொண்டமைத்து வழிபடும் அமைப்புங் கொண்டது; ஆண்டவன் ஆணுரு பெண்ணுருவாக இலகுகின்றான் என்பது அது காட்டும் உண்மை. பழங்காலத்தேயே இதனையே அடிப்படையாகக் கொண்டு,

'நீல மேனி வாலிழை பாகத்து ஒருவன்'

என்று சங்ககால நூல் சாற்றுகின்றதெனின், அதன் சிறப்பை என்னென்று கழறுவது? நாம் உலகம் முழுவதையும்—நிலையியல் இயங்கியற் பொருள்களின் கூறுகளையும—ஆய்வோமாயின், இரண்டின் இணைப்பு ஒன்றுபட்டு இயங்குதலைக் காணலாம். உயிரில பொருள், இரண்டு தனிப்பட்ட பொருள்களாலும், உயிருள பொருள், ஆண் பெண் என்னும் இரண்டு தனிப்பட்ட பொருள்களாலும இயங்கித் தொழிற்பட்டு உலகியல் நிகழ்வதைக் காணலாம். நாம் ஒன்றை எழுதத் துவங்கினால் எழுதும் கருவியும் அதற்குக் கடிதமும இன்றியமையாது வேண்டும். ஒன்றிருந்து ஒன்றின்றேல் எழுதுதல் இயலாது. இவ்வாறே எதை நோக்கினும காணலாம இதனானே நம் உடலுறுப்புக்களும் இவ்விரண்டாய் அமைந்துள்ளவும் அறியற்பாலது. பொழுது, பகலும இரவும; செயல, நலமும் தீங்கும்; ஏனையவும இவ்வாறே உயிர்களுள் எவ்வுயிர்களை எடுத்துக் கொண்டாலும் அவ்வவற்றுள் ஆண் பெண் என இரண்டிருத்தலைக் காண்கின்றோம். உலகத் தோற்றம இவ்விரண்டும ஒன்றுபட்டே நிகழ்கின்றன. இவ்வுண்மையைக் கூர்ந்தறிந்த நம் தமிழ் மக்கள்,

எல்லாம் வல்ல இறைவனை அம்மை அப்பனாகப் போற்றினார்கள். இதனைத், 'தொன்மைக் கோலம்' என, மணிமொழிப் பெருமான் அருள்கின்றார். இத்தகைய இயற்கையொடு சேர்ந்த உண்மையைக்கொண்ட சமயம வேறெங்கே காணமுடியும்? எனவே, இது தலைசிறந்த சமயமாய்—தமிழர் தனிச் சமயமாய்—உண்மை வழிகாட்டும் ஒண்சமயமாய்—இறையை அடையும் எண்மை நெறியாய்—இலகுவதென்க.

இதன் உண்மை நெறியை அளவை முறைப்படி ஆய்ந்து காட்டும் கண்ணாடியாக மிளிர்வன, சைவ சித்தாந்த சாத்திரங்கள் பன்னான்குமாகும் அவையிற்றுள் கடவுள் உயிர் உலகம் என்னும் முப்பொருள் உண்மைகளையும் வகுத்துக்காட்டி, உயிர் இறையடி யின்பத்தில் திளைத்து வீடுபேறும் நிலைபெற்ற நிலையை எய்தும் நெறியையும் வகுத்து நிரல்பட மொழிவனவாகும்.

இத்தகைய நன்னெறிக்கண்ணின்று ஆண்டவன் திருவடிப் பேறெய்திய பெரியார்கள், அறுபான்மூமமைத் தொண்டர்களாவா. இவர்தம வரலாற்றை முற்றமுடிய எடுத்துக் கூறுவது திருத்தொண்டர் புராணமெனப் பெயரிய பெரிய புராணம் ஆகும். இந் நூல் சேக்கிழார் பெருமானால் அருளப்பெற்றது; சைவத் திருமுறை பன்னிரண்டனுள், பன்னிரண்டாவதாகத் திகழ்வது; அடியார் பெருமையை அகநெக உரைப்பது, கருங்

தன் மனமும் கரைந்துகச் செய்யும் கனிவுமிக்கது இதன்கண் சேக்கிழார் பெருமான் இயற்கையான வருணனைகளைக் கூறும் போதுகூட ஆங்காங்கே இறைவன் காட்சியையும், அடியார் திறப்பாடுகளையும், பிறவற்றையும் எடுத்துக் காட்டி இறையடிப் பேரின்பினும, அடியாா அருளன்பினும் கற்றுரை ஈடுபடச் செய்வர். காட்டாக இரண்டொன்று காட்டுதல் சாலுமெனக் கருதுகின்றேம்.

பெரிய புராணம் ஆக்கற்குத் தொகையாக இருப்பது, நம்பி யாரூரர் அருளிய, 'திருத்தொண்டத் தொகை' யென்னும் தேவாரத் திருப்பதிகமாகும். அப் பெருமான் வரலாற்றை முதற்கண், 'தடுததாட்கொண்ட புராணம' என்னும் தலைப் பிந்து அருளுகின்றார். அதில் நமபிகள் இறையை வணங்கறகுத் தில்லை செல்கின்றாா. செல்லும்போது ஒரு காட்சி. தில்லையில் மலைபோல் உயர்நத மதில்களா ; அதனைச் சூழ ஆழ்நத அகழிகள்; அவ் வகழியில் அலர்ந்த மலர்கள் பொதுளிய தாமரைகள் ; அதிற் பூததத மலர்களில் தேன் ஊற்று ; அதில் வாழும் கரு வண்டுகளா பல ; அவை தாமரைமலர்த தேனை உண்டு உண்டு களிகூாந்து மயங்கிக கிடக்கின்றன. அவ்வகழிக் கரைமருங்கண் தாழைகள் . அதன் விரிநத மடலகள்; அம மடல்களில் நிறைந்த பூந்தாதுகளா ; மயங்கிக்கிடந்த வண்டுகட்குச் சிறிது உணர்வு வருகின்றது பறக்கின்றன ; தாழைப் பூந்தாதில் படிகின்றன ; அததாதுகள் அவைகளின் உடலெலலாம் அப்பிக் கொள்கின்றன ; கருநிற வண்டுகள் அத் தாதினால் வெண் ணிறம் பெற்றனவாகிப் பறந்து தம் இன்னொலி பரப்பிப் பாடிக் கொண்டு எதிர் வருகின்றன இக் காட்சி சுநதராா பெருமா னுக்கு இறைவன் தொண்டாகள் குளிததுமுழுகி வந்து மெய் யெல்லாம் வெண்ணீறு பூசிக்கொண்டு எழுந்து இறைவனைத் தொழுதற்கு அவன் புகழைப் பாடிக்கொண்டு செல்வதாகவும், தமமை எதிாகொண்டு அழைப்பனபோன்றும் தோன்றுவதாக வும் ஓர் அழகிய கற்பனையை உருவாக்கி அருள்கின்றார், நம சேக்கிழார் பெருமான். அச் செய்யுள் :

'மன்று ளாடுமது வின்னசை யாலே மறைசசு
ரும்பறை புரத்தின மருங்கே
குன்று போலும்உயர் இஞ்சிசூழ் மாடக குண்டகழக்
கமல வண்டலா கைதைத்
துன்று நீறுபுனை மேனிய வாகித தூய
நீறுபுனை தொண்டர்கள் என்னச
சென்று சென்றுமுரல் கின்றன கண்டு சிந்தை
அன்பொடு திளைத் ததிர்சென்றார்.' (தடுத்தாட் : ௬௬)

என்பதாகும் பிறுண்டும், பரவை நாச்சியாரைக் காண்கின்றார்; அம்மையாரும் வன்றொண்டரைக் காண்கின்றார்; இவ்விருவர்க்கும் பண்டை வினை கடைக் கூட்டுகின்றது; காதல் கொள்கின்றனர்; இருவரும மாறிப்புக்கு இதயம் எய்துகின்றனர்; இருவரையும் கண்ணுதலைத் தொழுமன்பே கைக்கொண்டு செலவுய்க்கின்றது. மணந்தாருயிருண்ணும் மாலைபோக, இருள் எங்குஞ் செறிகின்றது; அவ்விருட் காட்சி, நம் சேக்கிழார் பெருமானுக்கு நமக்குத் தோன்றுவதுபோன்று மைந்நிறமாகக் —கடல் நிறமாகத் தோன்றவில்லை; அரன் திருப்பெயராகிய— மந்திரமாகிய—ஐந்தெழுத்தை அறியாத மக்களின் நெஞ்சைப் போல் இருண்டது என்று கூறியருள்கின்றார். அக்காட்சி:

> 'அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலார்
> நெஞ்சும் என்ன இருண்டது நீணடவான்.'
>
> (தடுத்தாட் · கஙுசு)

பின்னர், இருளினை ஓட்டிந தண்கதிர் மதியந தோன்றுகிறது, அது வெள்ளி வெண்குடததுப் பாலசொரிவதுபோல் தன் தண்ணிய வெண்கதிரைப் பொழிகின்றது; அக்காட்சி நம பெருமான், சேக்கிழாா அடிகட்கு இறைவன பூசிய திருநீற்றொளிபோல் தோன்றி இன்புறுத்துகின்றது. அதனை,

> 'தோற்று பலவுயிர் கட்கெலாம் தூய்மையே
> சாற்றும இன்பமும் தணமையும் தந்துபோய்
> ஆற்ற அணடமெ லாம்பரந் தண்ணல்வெண்
> நீற்றின் பேரொளி போன்றது நீணிலா.'
>
> (தடுததாட் : கசுஉ)

என்பதாகும்.

பின்னும ஏனாதிநாதநாயனார் புராணததுள், ஏனாதிநாத நாயனாரை எதிர்ததுப் போர் புரிய வந்தோர் எவரும் தவறாது, கொலையுண்டு மாண்ட நிலைக்கு,

> 'நிலைப்பட்ட மெய்யுணர்வு நேரபட்ட போதில்
> அலைப்பட்ட ஆரவமுதற் றுற்றம்போல் ஆனார்'

அதாவது நிலையானஉண்மையறிவு பெற்றவர்கட்குக் காமம், வெகுளி, மயக்க முதலியன நில்லாமல் அறவே ஒழிநது போவதைப்போல் என்று உவமங்கொடுத்தருளினார், தொண்டர் சீர்பரவுவார்.

இவ்வாறே ஒவ்வொரு நாயன்மார் புராணத்தும் வருணனைகளிற்கூட இறைவன் இயற்கை, அடியார் சிறப்பு, சைவசமய நெறி இவைகளைக் கண்டு நம்போல்வார் அறிய அருளிய அரு

மறையாகிய இப் பெரியபுராணத்துக்குத் தெளிவுபட்ட உரை பன்னெடுங்காலமாக இல்லாதிருந்தது. அக்குறையை நம் சிவக்கவிமணி, உயர்திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் நீக்கி, அரிய பெரிய உரைவகுத்துதவினார்கள்; அவர்கள் கைம்மாறுபேணுக் கடப்பாட்டுக்குப் பொதுவாகத் தமிழுலகும், சிறப்பாகச் சைவவுலகும் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையன.

நிகழ்ச்சிகள்

கடந்த 6—5—54-ஆம் நாள் சிதம்பரத்தில் கூத்தப் பெருமான் திருக்கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் கோவை சிவக்கவிமணி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் எழுதிய பெரியபுராணப் பேருரை வெளியீட்டு அரங்கேற்றுவிழாத் துவங்கியது.

அதற்கு மாலை ௬-மணிக்குத் திருஞானசம்பந்தர் மடாலய இளவரசுப் பட்டம் உயர்திரு. சோமசுந்தர தேசிக அடிகளார் தலைமை தாங்கினார்கள்.

மேற்படி சிறப்பு, சிதம்பரம் சிவகங்கைக்கரையில் சிவவழி பாட்டுடன் துவங்கியது. பின்னர்த் திருமுறைகள், பெரிய புராணச் சுவடிகள் எல்லாம் யானைமேல் வைக்கப்பட்டுத் தேவாரம் பாடுதலுடன் நகாவலம் வந்தன. அரங்கேற்றப் போகும் பெரிய புராணப் பேருரை ஏழு புத்தகங்களும் நடராசர் சிற்சபையில் நடராசப்பெருமான் திருவடிகளில் வைத்து, பூசை வழிபாடுகள் செய்யப்பட்டன அப்போது பொதுத் தீட்சிதர் களின் சபை அமைச்சர் திரு. கலியாணசுவாமி தீட்சிதர் பொதுத் தீட்சிதர்களின் சார்பில சிவக்கவிமணி சி. கே எஸ். அவர்கட்குப் பொன்னாடை போர்த்தினார். கூத்தப்பெம்மா னுக்குத் திருப்பாவாடை வழிபாடு, திருமுழுக்கு முதலியன நிகழ்ந்தன. திருப்பனந்தாள் மடாலய அடிகளால் ஆயிரம் பேருக்குச் சோற்றுக்கொடை வழங்கப்பெற்றது.

அவ்வமயம் தலைமைதாங்கிய உயர்திரு சோமசுந்தர தேசிக வடிகளார் பேசியதாவது:

'பெரியபுராணம் பாடி அரங்கேற்றப்பெற்ற இடத்திலேயே அதேநாளில் பேருரை வெளியீட்டு நிறைவு விழாவும் கொண் டாடப்பெறும்படி முடிவுசெய்த விழாச் செயற்குழுவினரை நாம் யாவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம அதற்கு அன்பே உருவாக, தியாகமே சின்னமாகக் கொண்டொழுகும் திரு. பி டி. இராசன் அவர்கள் சீரியதலைமையும், தமிழுக்கும்

சமயத்துக்கும் தம்மை உரிமையாக்கிய திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியாரவர்களின் பண்பாடும் செயலாற்றும் திறமுமே காரணமென்று கருதுகின்றோம்.

பெரியபுராணம் முழுவதையும் உரையுடன் வெளியிட்டிருப்பவர்கள், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், திரு. ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள், திரு. சுப்பராய நாயக்கர், நாம் விழாக்கொண்டாடுகின்ற பேருதவி தந்திருக்கும் சிவக்கவிமணி திரு சி கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள முதலியோராவார்கள. சிவக்கவிமணியின் பேருரை சேக்கிழாரடிகளின் ஆழ்ந்த தெய்வீகக் கருத்துக்களை அகழ்நதெடுதத பெரியதோர் அருட்புதையலாக அமைநதிருக்கிறது. அதைச் சைவசமயததின் கலைக்களஞ்சிய மெனலாம. புராணவுரை தறகாலததுக்கு வேண்டியவாறு உருவெடுததுளது மிகவும சிறப்பானது நம் அருள்மணி நம்மிடையே பல்லாண்டு பல்லாண்டு வாழத திருவருள் துணைபுரிவதாக' எனக் கூறிமுடி ததார.

அவ்வமயம வரவேற்புக் கழகத தலைவர் திரு பி. டி. இராசன அவாகள பேசியதாவது :

'சமணமும் பௌத்தமும் தலைதூக்கி, சைவம் மக்களாலும் அரசாகளாலும் கொண்டாடபபெறாத காலவரலாற்றைப் பெரியபுராணக் கண்கொணடு பார்த்தால் அவ்விருணடகால வரலாறும் நமககுக கிட்டியதெனறே மகிழலாம. திரு. சி. கே. எஸ். அவர்கள் தமது நீண்டகால அடைவினால் (அனுபவம்) ஆராய்ந்து ஒரு அரிய வுரையை ஆக்கி வெளியிட்டுள்ளார்கள், கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத் திரட்டல், அகலநகூறல என்னும நான்குவகையாலும பெரியபுராணத்துக்கு இதுவரை உரையெழுதினாரில்லை. இம்முயறசியை மேற்கொள்ளவுமில்லை. எழுதுதல் தவறு என நினைந்தே பெரியவர்கள் எழுதாது விட்டிருநதனர். அது, அக்காலததிய சூழ்நிலை. இக்காலததில் எதையும் ஆராய்ந்தறிய முற்படுவதால் திரு. சி. கே. எஸ. அவாகள் தமது பேருரையை உதவியுள்ளார்கள். இத்தகைய சிறநத உரையைப் பொருள் இலக்கிய நுணுக்கம், இலக்கணப் பொருத்தம், சமய நோக்கு, மேற்கோள்காட்டல் முதலிய அரிய முறைகளைக், கையாண்டு உரையாசிரியர் செய்துளள பேருழியம் உலகம உள்ளளவும நின்று நிலவும்' என்றார்.

பின்னர்த் தமிழ்நாட்டு அருள்நெறித் திருக்கூட்டத்தார் சார்பில் திருவண்ணாமலை ஆதீன வித்துவான திரு. முத்து-வேங்கடாசலம் வாழ்த்துப்பா படித்தளித்தார்.

குன்றக்குடி அடிகளார் அருளிய வாழ்த்துரையைச் சபாபதித தம்பிரானும், திருப்பனந்தாள் ஆதீனம, தருமபுரம், திருவாவடுதுறை, மயிலம் முதலிய மடாதிபதிகள் சார்பிலும் வாழ்த்துப் பாக்கள் படித்தளிக்கப் பெற்றன. தவிர, தனித்தனி மக்கள் பலர் வாழ்த்துபபாக்கள் பாடியளித்தனர்.

கடைசியாகத தேவகோட்டைத் திருவாளர். உ. ராம. மெ. சுப.-சேவு மெ. மெய்யபப செட்டியாரவர்கள் (௨0) பொன் (பவுன்) மதிப்புள்ள பொன் அட்டையிட்ட பெரியபுராண நூல் ஒன்றைத் திரு டி. பி. மீனாட்சிசுந்தரனாரால் கொடுக்கச் செய்து வழங்கினார்கள்.

திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தம்மை வாழ்த்தி அன்புமாலை வழங்கிய யாவாகரும், பாராட்டிய ஏனைய யாவர்க்கும் தம் நன்றியுரையைக் கூறினார். இன்புடன் கூட்டம் முடிவுற்றது.

முற்றுரை

உலகில் ‘செயற்கரிய செய்வார் பெரியர்’ என்னும் வள்ளுவர் வழக்கிற்கேற்ப, நம் சிவக்கவிமணியவர்கள் தம் அஃகியகன்ற புலமையால் சீரிய கூரிய தீஞ்சொற்களால் பெரியபுராணத்துக்கு விரிந்த புத்துரை எழுதி உதவினார்கள் அவர்களின் அரிய முயற்சியும், காலத்துக்கேற்றவாறு சைவ வுலகுக்கு அரண் செய்யும் ஆக்கப்பாடும் அறிந்து கழிபேரோகை யெய்துகின்றோம். இவர்கள் இதுபோன்ற அரிய பெரிய தமிழ்த் தொண்டும், சைவத் தொண்டும் செய்து ‘ஆலமணிமிடற்றொருவன்போல மன்னி’ இவ்வுலகில் பன்னெடுங்காலம் வளனுற வாழுமாறு இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

மலையும் அணிலும்

[திரு சேனாதிபதி]

மலையும் அணிலும் மலைந்த தோர்நாள்
*"தலைகால் இன்றித் தவிக்கின்றாயே
சிறிய னாயினும் பெருமையே னுனக்கு?"
மலையார் இவ்விதம் மறுகினார்; கேட்ட
அணிலார் பைய அறைகின் றாரே:
"பெரியோய் எல்லாப் பெருமைக் குரியோய்
சரியின் றேனும் சாற்றக் கேண்மின்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ பற்பல பொருட்களின் சேர்க்கை
சிறிதும் பெரிதும் சேர்ந்ததே உலகம்
காலம் என்பது கார்த்திகை மட்டுமா?
ஆறிரு திங்கள் ஆனதே ஆண்டு
உண்மை யாயினும் உன்போல் பெரியன்
அல்ல; நீரே ஆயினும் என்போல்
சிறுபொருளல்ல ஆதலால் பெரியீர்
திறமைகள் பற்பல தெரிந்திட வேண்டும்
'வானை யளக்க உம்மால் இயலும்
வனமதைக் காக்கும் வன்மையும் உடையீர்!
ஓர்நொடிப் போதில் உயர விருந்து
கீழே குதித்து மேலே ஏறுவேன்!
கடுக்காய்க் கொட்டையைக் கடித்தே உடைப்பேன்
காட்டிய கொட்டையைக் கடிக்கின் றீரா?"
அணிலார் அறைந்த அனைத்தும் சரியே
பெருமைப் பட்டோர் பெரியோ ராகார்
சிறியோர் குணத்தால் சீரிய ராவார்
உயர்த்தப் பட்டோர் தாழ்த்தப் படுவதும்
தாழ்ந்தோர் உயர்ந்தோர் ஆவதும் காணீர்
இஃதே உலகத் தியற்கையென் பதுவே.

---

* தமிழில் ஓர் மரபுச் சொற்றொடர்.

எழுத்தும் புணர்ச்சியும்

[செல்லூர்க்கிழார் திரு செ. ரெ. இராமசாமிப்பிள்ளை]

முன்னைப் பழமொழிகட்கும் பின்னைப் புதுமொழிகட்கும் முன்னைமொழியாகவும் பின்னைமொழியாகவும் தன் சீரிளமைத் திறங்குன்றாது வளாவது நம தமிழ்மொழி.

இம்மொழி, திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும, குன்றெறிந்த குமரவேளும, நிதியின் கிழவனும் ஆய்ந்து பயின்றமையாற் சிறந்ததெனப போற்றுவா, பழந்தமிழாசிரியன்மார் ஆனாலும, அதன இனிமை, ஒலியமைப்பு, மென்மை வன்மை இடைமையென்னும மூவ்வகை ஒலியும் ஒரு நிகரவாய அமைப்பு முறை, எக்காலத்துக்கும ஒத்தகருத்தமைதியும அறங்களும் கொண்ட இலக்கிய செல்வவளங்கள், பிறவெல்லாம அதன் உயரிய சிறப்புக்கு ஏற்றனவாம.

இம்மொழி ஏனையமொழிகள் அளவு எழுததுப் பெருக்கமின்மை, ஆங்கிலம போன்ற மொழிகள அளவு, எழுத்துச் சுருக்கமின்மை இன்றி, இடைப்பட்ட நிறைந்த எழுத்துக் கூட்டங்களையுடையது பிறமொழிகளிலுள்ள ஒலிகளைக் கூட்டெழுத்தாலும தனிநிலையாகிய ஆய்த எழுத்தாலும பலுக்கி (உச்சரித்து) அமைக்க இயலும சிறப்புடையது. எனினும் இடைக்கால மக்களிற் சில புல்லுருவிகள தோன்றி, வேற்று மொழியாகிய வடமொழிச சொற்களை-எழுத்துக்களைக்-கோத்துச் செருகித தமிழ்மொழிக்கு ஊறுசெய்துகெடுத்தனர். இதனைப் பிற்காலததில் தமிழை வளாக்க முற்பட்ட சுவாமிநாத தேசிகர் போன்ற ஆசிரியன்மாாகளும்,

> ‘ ஒன்றே ஆயினும் தமிழ்ச் சொல்லுண்டோ
> தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவையார்
> மூன்றினும் முழங்கும் ஆன்ற பொருளெலாம்
> அவையினு மிலவேல்
> வடமொழி தன்னிற் பெறலா மென்ப ’

எனவும்,

> ‘ ஐந்தெழுத தாலொரு பாடையென் றுளதென
> அறையவே நாணுவர் அறிவுடை யோர் ’

எனவும கூறித், தாம் தமிழனென்பதையும் மறந்து தம் புன்மை தெரிப்பாராயினர்

இப்போலி மாந்தர்களின் புன்மொழிகளையும் அறிவுமுறைக் கொவ்வா ஆக்கமின்மையையும் பின்பற்றிப் பிற்கால அறியாத்

தமிழ் மாந்தர், வட வெழுத்துக்களையும், வட சொற்களையும் பிற வேறு சொற்களையும் தமிழிற் கலந்து கலந்து எழுதித் தமிழ் மொழியின் எழுத்துருவத் தூய்மையையும், சொல்லழகையும் கெடுத்துத் தொலைப்பாராயினர். இக்கால ஆங்கிலமொழி பயின்ற தமிழ்மக்களில் ஒருசிலர், தமிழ்மொழியில் சில ஒலி இல்லையென்றும் அவைகளை ஆங்கிலமொழியினின்றும் கடன் பெற்று நிரப்பவேண்டுமென்றும் வாது செய்வர் அவர் தம் அறியாமை இருந்தவாறென்னே! என்னே! அவரறியாமை குறித்து வருந்துகின்றோம்! 'அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால், இன்மை அரிதே வெளிறு' என்பது தேவர் திருமொழி அதற்கு எடுத்துக்காட்டாக இலகுகின்றனர். தமிழ்மொழிக்கண் ணுள்ள 'ககர' 'ழகரம்' போன்ற எழுத்துக் கட்கு ஏற்ற ஒலியுடைய எழுத்து அதில் இன்மையால் கூட் டெழுத்து எழுதியும் அதன் ஒலி பெறுதல் அமைந்தும் ஒரு மொழியிலிருந்து கடன் பெறுவது யாங்ஙனம்? ஒரு மொழியி லுள்ள ஒலி, மற்றொரு மொழியிலில்லாததால் அஃதொரு குறையுமாகாது. எந்த மொழிகளிலும் எல்லா நாட்டுமொழி களின் ஒலிகள் அமைந்ததில்லை. அமைவதும் முடியாது. பொன்னின் தன்மை பொன்னுக்குத்தான் உண்டு வெள்ளியின் தன்மை வெள்ளிக்குத்தான் உண்டு. அதனால் ஒன்றுக்குள்ளது மற்றொன்றுக்கில்லை யெனின், அது குறையாகக் கொள்வதற் கில்லை. இதுபோன்றே மொழிகளின் அமைப்பும். ஆங்கிலேயன், குளிர்நாட்டில் வாழ்வோன்; அவன் வாய், குளிரால் நடுங்கி நன்கு திறப்பதில்லை அதற்கேற்றவாறு எழுத்தும், சொற்களும் தோன்றின நம நாட்டுக்கு வந்தபோதுங்கூட அவன் வாய் நன்கு திறக்கவொண்ணாமையால் திருநெல்வேலி என்று சொல்ல முடியாது 'டின்னவெல்லி' என்றான். தூத்துக்குடியை 'டூடுக்குரின்' என்றான், திருவல்லிக்கேணியை 'டிரிப்ளிகேன்' என்றான். இவ்வாறு வெண்துரை கூறியவற்றைப் பின்பற்றி, நங்கருந் துரைமாரகளும் இவ்வாறே மொழிவர். இப்படிப் பேசுவது தமக்குப் பெருமையென்று இறுமாப்பர் ஐயகோ! தமிழன் அடிமைஅறிவை என்னென்று பகர்வது! எதற்கெடுத்தாலும் வேற்றுமொழி, வேற்றுநாட்டுக் கலை நடை உடை முதலியவற்றில் பேரவா; இதனால் தன்னிலையை மறந்தான். ஏனையவற்றை மறந்தது போலவே, தன் மொழியின் சிறப்பியல்புகளையும் மறந்தனன் எனவே, வேற்றுமொழியெழுத்துத் தமிழில் நுழைவது கூடவே கூடாது. நம் தமிழ் நெடுங்கணக்கில் இல்லாதவற்றை எதற்காகச் சேர்ப்பது? வேற்றுமொழியி லுள்ள சொற்களை அம்மொழி யமைப்புப்படி சொல்வது, எந்த மொழி யிலும் இயலாதவொன்றே எனவே நம் மொழிக்கேற்றவாறு

அமைப்பதுவே முறையாகும். இதுவே, மொழி வல்லுநர் கண்ட முடிபுமாகும். முற்காலத்திலும் இப்பிற்காலத்திலும் அறிஞர்கள் இவ்வாறே கையாண்டு வந்துள்ளனர். புஷ்பம், புஸ்தகம் என்னும் வடசொற்களை அவ்வாறே கடன் கொள்ளாது, 'புட்பம்,' 'பொத்தகம்' என்றே நம் தமிழ் எழுத்துக்கொண்டே அமைத்தனர். தமிழைக் கெடுக்க வந்த ஒருசிலரே அவ்வாறே எழுதினர். தற்காலம் மும்மொழிப் புலவராய்ப் பேராசிரியக் கிழமை பூண்டு, தமிழ்ப் பெரியராயிலங்கிய ஆசிரியர் மறைமலை அடிகள் மேல்நாட்டு நாடக ஆசிரியர் 'ஷேக்ஸ்பியர்' என்னும் பெயரைச் 'சேக்குப்பியர்' என்றே நம் தமிழ்வளங்குன்றாது எழுதுவர். அன்னாரால் நம் தமிழ்மொழி இன்றைய ஆக்கமும் எழுச்சியும் பெற்றதெனின், உண்மையன்றிப் புகழ்ச்சியாகாது. அவர்கள் தமிழில் எழுதியுள்ள உரைநடை நூல்கள் தமிழ் மேன்மையை - ஆக்கத்தை - வளர்ச்சியை - அளந்து காட்டுவன. அவர் தம் பெருமையறியாது நந்நாடு ஏமாற்றமுற்றது.

நந்தமிழ் மொழிக்கண் முந்து நூலாக இலகும் தொல்காப்பியம் தமிழ்மொழியின் ஒலிமரபு, சொன்மரபு, தமிழ் மக்களின் ஒழுகலாறாகிய அகப்புற வாழ்க்கைகளையும் தமிழர் தனிநாகரிகத்தையும் முற்றமுடிய எடுத்து மொழியும் முழுமுதல் இலக்கண நூல். அதன்கண் எழுத்திலக்கணங் கிளக்குங்கால்,

'எழுத்தெனப் படுப
அகர முதல்
னகர இறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே.'

என, மொழிந்தருள்வாராயினர்.

இந் நூற்பாவிற்கு உரை வகுத்த ஆசிரியர் நச்சினார்க்கினியர், இவ் வெழுத்துக்களின் நுட்பத்தையும் சிறப்பையுங் குறித்துக் கூறுங்கால்,

[1]'இவ் வெழுத்தெனப்பட்ட ஓசையை அருவென்பார் அறியாதவர்; அதனை உருவென்றே கோடும். அது, செறிப்பச் சேறலானும் செறிப்ப வருதலானும் இடையெறிப்பப் பெறுதலானும், செவிக்கட் சென்று உறுதலானும் இன்ப துன்பத்தை ஆக்குதலானும் உருவும் உருவுங் கூடிப் பிறத்தலானும் தலையும் மிடறும் நெஞ்சுமென்னும் மூன்றிடத்தும் நிலைபெற்றுப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உறப் பிறக்குமென்றமையானும் உருவேயாம். அருவேயாயின் இவ்விடத்திற் கூறியன இன்மை உணர்க. அல்லதூஉம், வன்மை மென்மை இடைமையென்று ஓதினமையானும் உணர்க.'

1. தொல். எழுத்து. நூற்பா : க. உரை.

என, எழுத்தின் தன்மையையும் அதன் சிறப்பியல்பையும் அதன் உருவையும் அருவையும் தம் ஆன்ற அறிவாற்றல் கொண்டு விளக்குவாராயினர்.

இதனுள் எழுத்தெனப்படுப அகரமுதல் னகர இறுவாய் முப்பஃதென்பது, அதன் முதன்மையும் தொகையும் ஒருங்கே விளக்கியதாகும். இதில் உயிரும் மெய்யும் ஒருங்கே கூறப் பெற்றமை பெற்றும். இவ்வாறு உயிரும் மெய்யும் தோன்றினும் மெய் உயிரின் உதவியின்றி ஒலியா. உயிர் தானே ஒலித்தலோடு பிற மெய்களினும் சார்ந்து அவைகளையும் ஒலிப்பிக்கும். உயிர் சாராத மெய்யை அறிதற்கு அதற்குமேல் புள்ளியிட்டனர். எனினும் மெய்கள் உயிர்க்கும் உயிர்மெய்க்கும் நடுவே நின்றுதான் ஒலிக்கும். இதன் இயல்பை [1]'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்,' என்றார் ஆசிரியர் தொல்காப்பியர்.

சார்ந்து வரல் மரபின், 'மூன்று' என்பது, இம் முதலெழுத்துக்களைச் சார்ந்த குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தமென்னும் முப்பாற் புள்ளியுமாகும் முதல் இகரமும், உகரமும் தத்தம் ஒலிக்குறைவால் முதலெழுத்தின் திரிபாகக் கோடலால் இவை சார்பெழுத்தெனப்பட்டன. ஆய்த எழுத்தொன்றும் உயிரினும் சாராது, மெய்யினுஞ் சாராது தனியே நிற்பதாலும், இம் முதலெழுத்துக்களில் உயிர்களுக்குப் பின்னர் நிற்பதாலும், இவ்வெழுத்துக்கள் போலாது, தான் மொழிக்கு உருபாகாது ஒலியளவாய் நிற்றலானும் இதுவும் சார்பெழுத்தெனப்பட்டது.

இம் முதலெழுத்துக்கள் முதல் முதல் வாய் திறந்ததும் தோன்றலால் முதலெழுத்து எனப்பட்டன. இதனை, தொல்காப்பியருக்குப் பின்வந்த நன்னூலாரும்,

'உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே'

என்றார்.

மக்கள் முதல் புற்பூண்டு ஈறுகக் காணப்பெறும் எல்லா இயங்கியல், நிலையியற் பொருள்களின் உள்ளகத்திருந்து உடலை இயக்கித் தொழிற்படுத்துவன, கட்புலனுகாப் பொருளாகிய உயிரேயாகும் அவ் வுயிரின்றேல் எவ்வகை உயிர்களும் செயற்படாது, கல் மண் கட்டைகள்போன்று வாளா கிடப்பனவே.

இத் தன்மையொப்பத் தமிழ் நெடுங்கணக்கிலுள்ள அகர முதல் ஔகாரம் ஈறுகக் கிடந்த எழுத்துக்கள் பன்னிரண்டும் உயிரெழுத்தெனவும், ககர முதல் னகரம் ஈறுகக்கிடந்த எழுத்துக்கள் பதினெட்டும் உடல் (மெய்) எனவும் ஆன்றோர் வகுத்

1. தொல். எழுத்து. நூற். கஙி

தமைப்பாராயினர். எனவே, இவை காரணத்தாற் பெற்ற பெயராம். உயிர்போன்று தானே இயங்கலான, உயிரெனவும், மெய்போன்று உயிரின் உதவி இல்லாது நடவாமையால் மெய்யெனவும் வழங்கிய சான்றோர் நுண்மாணுழைபுலம வியக்குந் தன்மையதாக ஒளிர்கின்றது.

இவ்வாறு தமிழ் நெடுங்கணக்கை வகுதத ஆன்றோர், இவ்விரண்டும ஒன்றுசாரப் பிறந்த எழுததுகளாகக் குறியீடு செய்து அவ்வவற்றுக்கு உருவும அமைதது உயிா மெயயெழுத்து எனப் பெயா ஆக்கி, ௧௮ × ௧௨ = ௨௧௬ எழுததுககள உண்டாக்கினா. ஆங்கிலம்போன்ற மேலைநாட்டு மொழிகளில் தனியே உயிர்மெய் யெழுததாக்காது உயிரையும் மெய்யையும் தனிததனியே யெழுதி மொழியை ஆககுவாராயினா. அவ்வாறே நம் தமிழ்மொழி யெழுத்துக்களை அமைததல்வேண்டுமென ஒருசிலா வாதிடுவர். அதுநம தமிழமொழிக்கேற்றதாகாததோடு பழைய இலக்கிய இலககணச செலவஙகளைத் திரையிட்டுப பிற்காலத்தவர் பயிலாதவாறு ஒடுககும சிறையுமாகும். அன்றியும் தமிழ்மொழியை அழிதலொழிபபதறகு மறைமுகமாகச செய்யும சூழசசியுமாகும. தமிழமொழி யெழுத்துக்களைப் பற்பல குழுக்கள தோன்றித தததமக்குத் தோன்றியவாறு எழுதியும், உருவைச் சிதைததும எழுததுச சீர்திருத்தஞ் செய்யாநிற்கும் தமிழ்ப்புலவர்கள் செலவ வளததில் குறைந்தவர்களாக இருப்பதால்—தாம, பளளிகளில் ஆசிரியராக இருப்பதால்-தம் வேலைகளைக் காபபாற்றவேணடிய நிலையினால்-மெல்லவும இயலாது விழுங்கவும இயலாது நடுபபட்ட நிலையில நின்று தததளிக்கின்றனா. எனவே, எவரும தமிழ்மொழியைத் தங்கொண்டித்தனமாகத் திருதத முனவருகின்றனா. பிறரெல்லாம் தமிழ்வளனை ஆர அமரக கறகாதவர்; தம் செல்வாக்கினாலும் நல்லூழ்வயததாலும இதழாசிரியாபோன்ற உயர்நிலைகளில் இருத்தலால், இவ்வாறு தமிழைத திருத்த இடனுமுண்டாகின்றது. தமிழ்நாட்டில் தமிழகமெனத் தனிக்குழு அமைத்து மொழிப்பாதுகாபபுச் செய்யாதிருக்கும் குறையினால் நிகழுங் கேடேயாகும் இது.

(தொடரும்)

எழுத்துப் போலி

[வித்துவான், திரு. ந. சண்முகசுந்தரன்]

போல்வது போலி எனப்படும. ஓா பொருளுக்கும் மற்றோா பொருளுக்கும் ஓா வகையான் ஒப்புமை காணபபட்டு மற்ற வகையான ஒவவாமை காணப்படின் அமமாறுபட்ட பொருள போலி எனபபடும் சில நிலைததிணைகளிற் கூட நாம் போலிநிலைததிணைகள் சிலவற்றைக் காண்கிறோம வைரம் போன்ற சில உயர்ந்த பொருள்களில் கூடப போலிகள் காணப்படுகின்றன. பொன்மினுக்கு மேறபூச்சுப் பெற்ற அணிவகைகள இககாலத்து மிகுதியாகக் காணபபட்டும அணியப்பட்டும வருகின்றன அவை உண்மையான பொன அணிவகைகளைக் காட்டினும் பாாவை, ஒளிததன்மைக்கும் புதுமையில் சிறந்து காணபபட்டாலும நாளடைவில் பகல் மதியைப்போன்று காட்சியளிக்கின்றன

மக்களிலுங்கூட, உளளொன்றும புறமொன்றுமாக நடப்பவாகளைப் 'போலி ஆசாமி' என்று அழைக்கின்றனர் உண்மைப்பொருளோடு போலி போட்டியிடுகின்ற தன்மை, தோகையைக் கண்டு வான்கோழி ஆடுவதை யொககும

உலகில் காணப்படும் பொருள்களில் போலிகளும் கலநது காணப்படுவதைப போல, எழுத்துக்களிலுஙகூட ஓர் சில வெழுத்துக்கள் ஒன்றுகூடி ஓரெழுததின் ஒலியைப் போனற போலியெழுத்துககளும மொழியில் விரவிவருகின்றன அப போலி யெழுததுககளைப்பற்றி இலக்கண ஆசிரியாகளும் வரைந்து சென்றுள்ளனர் போலியெழுததுக்களைப் பெற்ற சொற்கள் இலக்கணச்சொற்களலல வென்றும் தங்கள் நூற்பாவில் காணுமாறு உரைததுப் போயினர்.

ஆனால், வடமொழிப் பற்றுள்ள உரையாசிரியர் சிலர் மாறுபட்ட கருத்துடன் தம் மதி நுட்பததிறததால உரையியற்றி உள்ளனர். ஆனல் நூலாசிரியரின் கருதது, தன் கருத்தாக இருக்குமா ? எனவும், பழநதமிழ் இலககண ஆசிரியரின் கருத்தும் ஒத்துளதா ? எனவும, தனிததியங்கும செந்தமிழிற்கு இழுக்கெனவும் ஆராய்ந்தாரல்லர். வடமொழி இலக்கணததைத் தழுவித தமிழிலக்கணம் எழுநதெதனறும், இருமொழி இலக்கணத்திற்கும் ஒப்புமை உண்டென்றும தஙகள் உரைகளில் எடுத்துக்காட்டிச சென்றுள்ளனர் அவ்வெடுத்துக்காட்டுகளில் ஒன்று, எழுத்துபபோலியைப் பற்றியதாகும். எனவே, எழுத்துபபோலியைபபற்றி நூலாசிரியர்கள கூறியவற்றையும், உரையாசிரியர்களின் உரையைப் பற்றியும் ஈண்டு ஆராய்வாம்.

ஒலகாப் புகழ்வாய்ந்த தொல்காப்பியத்தில் ஆசிரியர் தொல் காப்பியனார் ஐ, ஒள என்ற தமிழ்எழுத்துக்களின் ஒலியைப் போன்று சொற்களில் வேறு எழுத்துக்கள் வந்து இசைக்கு மென மொழிமரபில்,

"அகர இகரம ஐகார மாகும்" (தொல் ருச)

"அகர உகரம ஔகார மாகும" (தொல்:ருரு)

"அகரத திம்பா யகரப் புள்ளியும
ஐ யென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும" (தொல:ருசு)

என, நன்கு கூறியுள்ளார். அந்நூற்பாககளுக்கு விளக்கமான பொருள வருமாறு:—

அகரமும் இகரமும்கூடி ஐகாரம் போன்று இசைக்கு மெனவும, அகரமும உகரமும்கூடி ஔகாரம் போனறு இசைக்கு மெனவும், இவவிரணடு உயிாககு நடுவில யகர மெய்யும, வகர மெய்யும வந்து அவவிரணடு உயிாகளைபபோனறு இசைககு மெனவும ஆகும மூன்றும நூறபாவிடதது "மெய பெற" எனறதனுல வகரவொறறும இடையிலவநது ஔகாரம் போனறு இசைககுமெனக கொளக.

இககருத்தையே சார்பு நூலாசிரியராகிய நன்னூலார் தம் நூலில தொலகாபபிய மூன்று நூறபாககளையும் ஒன்று சோதது விளக்கம் பெற,

"அமமு னிகரம யகர மெனறிவை
எயதி னையொத திசைககு மவவோடு
உவவும் வவவும் ஔ, வோ ரன்ன" (நன்னூல:கஉரு)

எனக கூறியுள்ளார். இந்நூறபாவின் பொருள வருமாறு:— "அகரததினமுன் இகரமும யகர மெயயும் வருமாயின் ஐகாரத்தை ஒதது நடக்குமு; அகரததின்முன் உகரமும வகர மெய்யும் வருமாயின் ஔகாரததை ஒத்து நடக்கும எனவே, யகர வகரமெய்கள நடுவிற் கலக்குமெனக கொளக."

(எ-டு) அய்இ—ஐ. அவ்உ—ஔ.

தமிழ்மக்கள் மொழியிலும் அரசியலிலும வளமபெற்றுத திகழ்ந்த காலத்துப புலவாபெருமக்களாலும அரசர் திருமக்க ளாலும் போற்றி வளர்த்துவந்த இடைசசஙகததும், கடைச சஙகததும் இலக்கணநூலாகத் திகழ்நத பழநதமிழ மக்களின் வாழ்க்கைவரலாற்று நூலெனப போற்றும் தொல்காபபியத் திற்கும அதன் வழிவந்த சார்புநூலாகிய நன்னூலுக்கும ஒப்புமை காணுமல் வடமொழிப்பற்றுடையோர் தாம் கற்ற வடமொழி இலக்கணததோடு ஒப்புமைகண்டு பின் வந்த

நன்னூலுக்கு உரை வகுத்தனர். மற்றும், "வடநூல் உணர்ந் தார்க்கன்றித் தமிழ் இயல்பு விளங்காது" என்றும் கூறிப் போந்தனரென்றால் அவரின் செந்தமிழ்ப்பற்று எத்தகைத் தென்று கூறுவது?

'தம் முக்குணவயத்தால் முறைமை மயங்கிக் கூறினா' என்று பிறரையெல்லாம் கூறித் தாங்களே பழந்தமிழ் இலக் கணத்திற்கும், தமிழ்இயல்புக்கும் முரண்பட்டுக் கூறினரென் றால் அவரே முக்குணவயத்தால் முறைமை மயங்கினர் ஆவர் எனலாம்

வடமொழிப் புலமை வாய்ந்த சிவத்திரு சிவஞான முனிவர் அவர்கள், வடமொழிப் பற்றினால் சங்கரநமசிவாய உரையைத் திருத்தியும் புதுக்கியும் வகுத்த நன்னூல் விருத்தியுரையில், "அம்முனிகரம் யகரமென்றிவை" என்ற நூற்பா 'வடநூலார் சந்தியக்கரமென்பவற்றுள் ஐ, ஔ, என்னும் நெட்டெழுத்துக் களின் வடிவு புலப்படுதல் உணர்த்திற்று' என்றும், எழுத்துப் போலி உணர்த்திற்றெனக்கூறும் ஆசிரியர், மயிலைநாதரைத் "தமிழ்நூற் பயிற்சியொன்றுமே யுடையா"ரென்றும், "அவர் கூறும் பொருள், பெரும் பயனின்மையானும், வடநூலோடு மாறுபடுதலானும் அது பொருந்தாதென்க" எனக் கூறியுள் ளார் அதைப் பின்பற்றியே சில காண்டிகையுரையாசிரியர் களும் அவ்வாறே கூறிப் போந்தனர்.

நன்னூலாசிரியராகிய பவணந்தியாருக்கு முனிவர் கொண் டுள்ள கருத்து அல்லவென்பது எழுத்ததிகாரத்தைத் தொகுத்துக் கூறும் நூற்பாவாகிய,

"எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலி யென்றா
பதம்புணர் பெனப்பன் னிரு பாற்றதுவே" (நன்னூல்· ௫௭)

என்றதில், போலி எனக் கூறியிருக்கின்றாரே யல்லாமல் சந்தியக்கரமெனக் கூறக் கண்டிலம் அன்றியும், தொல்காப்பிய ஆசிரியரின் நூற்பாக்களின் கருத்தையே, "அம்முனிகரம் யகரமென்றிவை" என்ற நூற்பாவில் மாறுபடாமல் கூறியிருப்ப தாலுமறிக அவ்வாறிருக்க, முனிவர் சந்தியக்கரம் நுதலிற்று எனப் புதியன புகுத்தி முன்னம் கூறிய மறுப்புரையும் கூறிப் போந்தார்

அம்மறுப்புரை பொருந்தாதென்பது :

முனிவர் பெரும் பயனின்மையென வாளா கூறினரே யன்றி எடுத்துக்காட்டுடன் எவ்வகையில் பயனின்மை எனக்

காட்டினாரல்லர். தமிழிலக்கணமெல்லாம் வடமொழியோடு மாறுபடாமலிருக்க வேண்டுமென்ற நியதியுண்டா? உண்டெனின், அவ்விடத்தைச் சுட்டிச் சொல்லவேணடும் உலகத்து எம்மொழியும் வடமொழியோடு மாறுபடாமலிருக்கின்றனவா? முனிவர் கூறும் சந்தியக்கரமே நூலாசிரியர் கருதமெதனின் வடநூலார் சநதியக்கரம் எனக்கூறும் எகர ஒகரங்களையும் உடன் கூறியிருப்பார். அங்ஙனம கூறாமையின் எழுத்துப் போலி உணர்த்தினாரென்பதே துணிபாம்

மற்றும், இதனாற் பெறபபடும் பயன் யாதோவெனின்? செய்யுளில வருமு எதுகைககண் இவ்வாறு கொளள நிற்றலே யாகும். எடுத்துக்காட்டாக,

> "அவவிய நெஞ்சததா னாக்கமுஞ் செவவியான்
> கேடும் நினைககப் படும்" (திருககுறள்: ௧௬௯)

என்றதன்கண் 'செவ்வியான்' என்பதற்கியைய 'ஔவியம்' என்பது 'அவ்வியம' என நிற்பதைக காண்க. இவ்வாறு வந்தவிடத்தும் கணடுகொள்க

இரு ஆசிரியருக்கும் மயக்கவேற்றுமை:

தொல்காபபியர், மொழிக்கு முதலினும் இறுதியினும் வரும் எழுத்துக்களைக் கூறி, அதனபின் அஃறிணைக்கண், னகர வீற்று மொழிகளைபபற்றிக் கூறுமிடத்து, சொறகளில் னகரவீறும் மகரவீறும் தம்முள் மயஙகியும மயங்காமலும வருமென நுதலிப் போந்தார். மயங்கி வருமிடத்து ஒரெழுததிற்குப் பதில் வேறோரெழுத்து வந்து பொருளமாறாமல் மொழியில மயங்கி வருவதால் போலியைச்சார வையாமல் மொழிகக இறுதியில் வரும் எழுத்துக்களைக்கூறி அதனபின் கூறினார். எல்லா மொழிகளிலும் ஒத்து நடவாமையாலும் ஆசிரியர் மொழி மரபு ஈற்றின்கண், னகரவீற்று மயக்கநூற்பாவை அமைத்துச் சென்றார். நன்னூலாரும்,

> "மகர விறுதி யஃறிணைப் பெயரின்
> னகரமோ டுறழா நடப்பன வுளவே" (நன்னூல்: ௧௨௨)

எனப் பகாநதார். உறழா எனும் சொல்லாற்றலான் உறழ்வனவும் கொள்க.

தொல்காபபியரைப் போலவே இவரும் மொழி முதலீறிடைநிலை கூறிய பின்பே இம்மயக்கமும கூறியுள்ளார். இம்மயக்க நூறபாவை முனிவரும், அவர் வழி உரை வகுத்த காண்டிகை உரைக்காரரும் போலியென்றே வகுத்துச்சென்றனர்.

மயக்கத்தின்பாற் படுத்தும் பொருளை மறுத்து முனிவர் கூறும் மறுப்புரையாவது :—

"இங்ஙனங் கூறிய எழுத்துக்கண் மொழிக்குறுப்பாகி, ஒன்று நின்ற நிலைக்களத்து மற்றொன்று அதுபோல மொழி நிற்பதன்றி ஒன்றோடொன்று மயங்கி, இரண்டெழுத்தும் உடனிற்பதின்மையானும், முதலீறிடை நிலைகட்குப் புறனடை யுங் கூறிக் குறைவறுத்தமையானும்; 'உறழா நடப்பன' என்றும், 'ஒக்கும்' என்றும், 'உறழும்' என்றும், உவமவுருபு கொடுத்து இம்மூன்று சூத்திரத்தாங் கூறுதலானும், அது பொருந்தாதென்க," எனக் கூறியுள்ளார். அவர் மறுப்புரை பொருத்தமற்றதென்பதை நன்கு ஆராய்வாம்.

போலியென்பதும் மயக்கமென்பதும் வேறுபாடுடையன·

போலியில் எழுத்துக்களின் ஒலி வேறுபடாமலும் பொருள் மாறுபடாமலும் காணப்படும் மயக்கத்தில் எழுத்துக்களின் ஒலி மாறுபட்டும் பொருள் மாறுபடாமலும் காணப்படும்.

எடுத்துக்காட்டாக இவ்வேறுபாட்டை,

ஐவனம்—அஇவனம், அய்வனம்,

ஔவை—அவ்வை என்பனவற்றிலும்;

அகம்—அகன், முகம்—முகன், நிலம்—நிலன் என்பன வற்றிலும் ஒலித்துப் பார்க்க.

சிறப்பாக ஒலிக்கும்பொழுது சொற்களின் ஒலி மாறுபடா திருப்பதைத்தான் இலக்கண ஆசிரியர் போலி எனக் காட்டினர். ஓருருபு நிற்கவேண்டிய விடத்து மற்றோருருபு வந்து மயங்கி நிற்பதைப்போல் கலம் - கலன், நிலம் - நிலன் என்பன போன்ற வற்றில் ஓரெழுத்திற்காக மற்றோரெழுத்து காணப்படுகின் றனவே யன்றி, ஒலியில் ஒத்துக்காணப்படவில்லை. ஏவல், வியங் கோள் என்பன ஒருபொருட் கிளவியாயினும் இருதிணை யைம் பான் மூவிடங்களினுஞ் செல்லும் ஏவலை வியங்கோள் என்பது தொன்னெறி மரபாதல்போல, ஒன்றோடொன்று மயங்கி இரண் டெழுத்தும் உடனிற்பதின்மையாயினும் எழுத்தொலியில் ஒப்புமை காணப்படாமையான் அது குறித்தே போலியென்னுது மயக்கமென்றனராகலானும், ஒன்றோடொன்று மயங்கி இரண் டெழுத்தும் உடனிற்க வேண்டுமென்ற நியதி இன்மையானும், இம்மயக்க வெழுத்துக்கள் முதலீறிடைநிலைகளைப் போலன்றிப் பெரும்பாலான விடங்களில் ஒத்தும், சிறுபாலான விடங் களில் ஒவ்வாமையும் காணப்படுகின்றமையால், அவைகட்குப்

புறனடை கூறிய பின்பே நுவலவேண்டுமாகலானும், நூற்பாக்களில் "உறழா நடபபன" என்றும், 'ஒக்கும்' என்றும், 'உறழும' என்றும், உவமவுருபு கொடுததநால் பொருந்தாதென்பது சிறப்பிற்றாகலானும், பெரும்பாலான விடங்களில் மயங்கி வருவதை நூற்பாவினுலே கூறி மயஙகாத சிறுபானமையைச் சொல்லாற்றலான் அமைத்தற்கு அவ் உவமவுருபு கூறினரே யன்றி வேறெதற்குமல்ல வாகலானும் முனிவா கூறின அம் மறுபபுரை பொருந்தாதென்க செந்தமிழ்ச்சான்றோர் செம்மை யுணாநது உரைபபாராக.

ஐ, ஔ என்பன தமிழ் எழுத்து முறை பற்றியதே :

தமிழ நெடுங்கணக்கு வடமொழியையோ ஆரியத்தையோ பின்பற்றியதன்று. உலகுக்கு வடிவு தநத நாட்டினஙகள் எகிபதிய, சாலடிய, தமிழ், சீன இனஙகளே. இவற்றுள்ளும் இன்றைய இந்தியமொழிகள அனைத்துக்கும் அடிப்படையான நெடுங்கணக்கு மரபு இநதியாவுக்கு மட்டுமே தனிச்சிறபபுடையதாதலாலும, பிறநாட்டு நெடுங்கணக்கு வரிசையில் இன்றளவும் இத்தகு வரிசைமுறை காணப்படாததாலும, ஆரியா வருமுன்பே இநதியாவில் எழுததுமுறை இருந்ததாலும், பிற இந்திய மொழிகளனைத்தின் நெடுஙகணககுமுறை தமிழ்ப்பேரினத்திற்கே உரியதாகுமென்பது மொழிவரலாற்றுமுறையில ஆராயுமிடத்து நன்கு வெளிப்படும.

ஆரியர் வருவதற்கு முன்பே இந்தியாவில் மொழி வளாச்சியடைந்து உயர்நிலையிலிருநததென்பதும, அரசியல் நன்முறையில் நடைபெற்றது என்பதும, மக்கள் மிக்க நாகரிகததுடன் வாழ்நது வந்தார்களென்பதும் சிநதுநதிப பள்ளத்தாக்கில் தோண்டி யெடுக்கபபட்ட நகரங்களிலிருந்து அறியவருகின்றன. மேலும, அங்குக் காணப்படும மொழி தமிழே என்பதும, நாகரிகம, சமயக் கொளகை தமிழருடையதே என்பதும், செய்யுள், தமிழ்நடை தழுவிய குறளவெண்பாக்கள் என்பதும் புதைபொருள ஆராய்ச்சியாளரின் கருததாகும்.

சிந்துவெளி நாகரிகத்தின் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பே மனிதத் தோற்றத்திற்கிடமாகிய குமரிக கண்டததில் வழங்கிய மொழி, தமிழென்பது பழந்தமிழ இலக்கியங்களால் நன்கு உணரலாம். வண்டமிழ் மாமுனியாகிய அகததியர், மொழி இலக்கணம் வகுத்தாரென்பதும், அதன் வழிநூலே தொலகாப்பியமென்பதும ஆராயுமிடததுச் சிறநது காணப்படுகின்றது. அகத்தியம் செய்த அகத்தியர் தமிழ் முனிவரே ஆவர்; ஆரியர் அல்லரென்பதற்குப் பல சான்றுகள் உள.

விரிக்கின் பெருகும். அகத்தியர் என்பது தமிழ்ச்சொல்லே அது தமிழுக்கு இன்றியமையாதவர் என்ற பொருளுடையது.

ஆசிரியர் சிவஞான முனிவர் தொல் பாயிர விருத்தியுரையில் "ஐந்திரம் நோக்கித் தொகுத்தானெனின்...................வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படாமையானும் இவையெல்லாம் தாமே படைத்துக் கொண்டு செய்தாரெனின், முந்துநூல் கண்டு என்பதனோடு முரணுதலானும் முற்காலத்து முதல்நூல் அகத்தியம் என்பதூஉம், அதனை வழித்தாகிய தொல்காப்பியம் அதன்வழி நூலென்பதூஉம் துணியப்படும்" என்று முன்னம் கூறி, பின்பு முதற்சூத்திர விருத்தியில் "வடநூலார் கருத்துப்பற்றியே சந்தியக்கரமென 'அகர இகர' 'அகர உகர' 'அகரத்திம்பர்' என்று நூற்பாக்கள் இயற்றினர்" என்று கூறுதலும், நன்னூல் விருத்தியில் "வடநூலோடு மாறுபடுதலானும் அது பொருந்தாதென்க" எனக் கூறுதலும், முரண்பட்டுக் கூறுதலே யாகும்

எனவே, ஐ, ஔ என்பன தமிழ் எழுத்து முறைபற்றியதே வடநூலார் எழுத்துமுறை பற்றியதல்ல ஆதலாலும், தமிழெழுத்து முறையும், இலக்கியமும் வகுத்தவர் பண்டைத் தமிழரே ஆவராதலாலும், மேற்காட்டிய தொல் நூற்பாக்களும், அதன் சார்பாக வெழுந்த 'அம்மு னிகரம' என்ற நன்னூல் நூற்பாவும் எழுத்துப்போலி உணர்த்திற்று என்பதும், வடநூல் சார்புபற்றிச் சந்தியக்கரம் நுதலிற்று என்பது நூலாசிரியர்களின் கருத்தல்லவென்பதும், முனிவர், நன்னூலில் போலியெனக்கொண்ட நூற்பாக்கள் எழுத்துக்களின் மயக்கத்தைப் பற்றிக் கூறுவனவென்பதும், அதுவே, தொல்லாசிரியர் கருத்தென்பதும், மயக்கமும் போலியும் வேறுபாடுடையன வென்பதும் இன்னோரன்னவை கண்டு சான்றோர் செம்மை உரைப்பாராக

வள்ளல் பாரி

[திரு. அ. குருநாதன்]

"எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்றார் அருந்தமிழ் மூதாட்டியார் ஔவையார். பண்டைக்காலத்தே நம் தமிழ்நாட்டினகண வளளல்கள பலர் சிறக்க வாழ்ந்தனர். அதனால தமிழகம் சிறப்புற்றுத திகழ்ந்தது வளளல பலருள பாரியும ஒருவன் அவன் யாவர்க்கும் ஈததுவககும் பெற்றியான் இரந்தவா இன்முகஙகாணும இயல்பினன் கருணையின் உறைவிடம் போர்ததொழிலில சிறந்த வீரன. அவன் முந்நூறு ஊாகளைககொணட பறமபு நாட்டை ஆட்சிபுரிநது வந்தான். அவன் புகழ வான் சிறிதாபபோர்தததது, அதைக் கண்ட தமிழ்நாட்டு மூவேந்தரும் (சேர, சோழ, பாண்டியர்) பாரியின் அருமபுதல்வியர்களை மணநது அவனைத தங்கள் உறவினனுக்கிககொள்ள விழைநதனா

பண்டைக் காலத்தில் காதல் நெறியானே மணம் நிகழ்நது வந்தது. பாரியின் மகள இருவரும் மூவேந்தரில் யாரையும் மணகக இசையவில்லை. அது காரணமாக வேநதாகள் மூவரும பெருஞ்சினங் கொண்டனா ஒருஙகே கூடினர். பறமபு மலையை முற்றுகையிட்டனர் அவன் மகளிர் இருவரையும் சிறை செய்யத துணிபு கொண்டனர்.

பாரி அருங்கலை விநோதன், புலவர் பலரை எக்காலத்தும் தன் நாட்டின்கண் இருத்தி, வேண்டுவன நல்கி மகிழும் தன்மையான் அவனுக்கு உயிர் நண்பர் கபிலர் என்னும தூய்மையாளர். இபபுலவர் பெருந்தகை முற்றுகையிட்டிருக்கும் மூவேந்தரையும் நெருஙகிப் பாரியின் வீரத்தையும, கொடைத்திறனையும் கூறுகின்றார்.

"முடியுடை மன்னர்களே! பாரி பெரிய வீரன். அவனை வெல்ல உஙகளால் முடியாது. இந்த முற்றுகை அறநெறிப் படாது.

அவன் நாட்டைப் பெற விழைவீராயின் பரிசிலராக வாருங்கள். பாரியின் பறம்பு நாடு தள்ளாவிளையுளையுடையது. தக்கார் வாழ்வது. தாழ்விலாச் செல்வரைக்கொண்டு திகழ்வது. இந் நாட்டார் உழுதலைச் செய்யாமலேயே நால்வகை உணவுப் பொருள்களைப் பெறுவர். ஒன்று, சிறிய இலைகளை உடைய மூங்கிலின் நெல்விளையும்; இரண்டு, இனிய சுளைகளை உடைய பலாவின் பழம் பழுக்கும்; மூன்று, செழித்த கொடிகளை

உடைய வள்ளிக் கிழங்குகள் பூமியின்கீழ் உண்டாகும்; நான்கு, தேன் முதிர்ந்து நீல நிறம் பரந்து தேன்கூடு பருத்தலால் அதைத் தாங்கி நிற்கும் கோடு இற்றுவிழ அதனால் அம் மலைக் கண் எக்காலத்தும் தேன் சொரிந்துகொண்டே இருக்கும். அவன் மலையோ வானளாவியது. இம் மலைக்கண் உள்ள சுனைகள் வானின்கண் துலங்கும் உடுக்கணத்திலும் பல இங்ஙன மிருப்பதால் இந் நாட்டிலுள்ளார் உணவிற்கும், நீர் முதலியவற் றிற்கும் யாங்கணும் செல்லவேண்டுவதில்லை. இங்கேயே இருந்துகொண்டு வீரத்துடன் போர்புரிவர் இத்தகைய எவ்வாற்றானும் குறையில்லாத சிறப்பிற்றாய இம் மலையில் உள்ள மரங்கள்தோறும் உங்கள் யானைகளைப் பிணித்தீர் ஆயினும், இட மெங்கணும் பரப்பிய தேரினீர் ஆயினும் நீங்கள் முயற்சியால் வெல்லமாட்டீர்கள். உங்கள் வாள்வலியைக் கண்டு அவன் தன் நாட்டை ஈயமாட்டான். அது கோடும் நெறியினை யானறிவேன். வடித்து முறுக்கப்பட்ட நரம்புகளை உடைய சிறிய யாழ்களை மீட்டி, நுங்கள் மணங்கமழும் கூந்தலை உடைய மனைவியர் பின் வர நீங்கள் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் செல்லின், தன் பறம்பு நாட்டையும், குன்றையும் ஒருங்கே ஈவான்."

இங்ஙனம் கூறும் புலவர் திலகம் கபிலர் கூற்றால், பாரி என்னும் வள்ளல் வீரஞ்செறிந்த வில்லாளன் என்றும், பரிசிலர் யாது விரும்பினும் ஈயும் பான்மையன் என்றும், தள்ளாவிளை வும், தக்காரும், செல்வரும் சேர்வதே நாடு என்றும் அறிந்தாம். நம் செந்தமிழ் நாடு பண்டுபோலவே என்றும் வள்ளல்களையும், புலவர் பெருமக்களையும், சான்றோர் பலரையும் தாங்கித் திகழ்வ தாக.

"அளிதோ தானே பாரியது பறம்பே
....
....
நாடுங் குன்றும் ஒருங்கீ யும்மே." (புற: ௧0௯)

திருக்குறள் அகவல்

[வித்துவான், திரு. மா வேதாசலம், எம் ஏ, பி ஓ எல்.]

(சிலம்பு - உஅ. பரல்-௯, பக்கம் ௪௪௦-ன் தொடர்ச்சி)

௬. வாழ்க்கைத் துணைநலம்

1 மனைக்குத் தக்க மாண்பினை உடையள்
மனைவி யாக மணந்தான்
வருவாய்க் கேற்றாள் வாழ்க்கைத் துணையே.

2. மனையற மாட்சி மனைவி யிடத்து
வாயா தாயின் வாழ்க்கை
எனைமாண் பாயினும் ஏதும் இன்றே.

3, மனைவி நல்ல மாண்பின ளாயின்
இல்ல(து) எவனோ? இலளேல்
உலகின ளாயினும் உள்ள தென்னே?

4. பெண்ணின் மிக்க பெரும்பொருள் யாவுள
கற்பெனும் கலங்காக் காவல்
பெறலரும் பொருளாப் பெற்றக் காலே?

5. தொல்புகழ்த் தெய்வம் தொழாஅ ளாகிக்
கணவனைத் தொழுதெழும் காரிகை
பெய்யெனச் சொல்லப் பெய்யும் மழையே.

6. கற்புக் காத்துக் கணவன் வேண்டும்
உண்டி முதலிய உதவி
நற்புகழ் காக்கும் நல்லாள் பெண்ணே.

7. சிறைகடி காப்பெவன் செய்யும் மகளிர்
நிறையால் காக்கும் நீளரண்
தலைமைத் தாய தாவுக் காப்பே.

8. வாய்த்த கணவனை வழிபடல் செய்யின்
புதேள் வாழும் பொன்னிலம்
மகளிர் பெறுவர் மாண்ட சிறப்பே.

9. புகழினை விழையும் பூங்குழல் மங்கை
இல்லா தாருக் கில்லை
இகழ்வார் முன்னர் ஏறு நடையே.

10. மங்கலம் என்ப மனையாள் மாட்சி
அதனது நல்ல அணிகலம்
நல்ல மக்களை நனிபெறு தல்லே.

எ. புதல்வரைப் பெறுதல்

1. அறிய வேண்டுவ அறியும் மக்களைப்
பெறுதல அல்லது பிறவே
அடையு மவற்றுள் அறிவ திலையே

2. எழுமைப் பிறப்பும் இன்னாத் தீண்டா
பிறாபழி சேராப பெருமைய
பெற்றிசேர் மக்களைப பெற்றக் காலே.

3. தம்முடை மக்களைத் தம்பொருள் என்ப
புதல்வா செய்த பொருள்கள்
தந்தம் வினையால் தம்பால் வருமே

4. அமிழ்தந் தன்னினும் ஆற்ற இனிதே
மன்பெருங் காட்சி மக்கள்
அஞ்சிறு கையான் அளாவிய கூழே.

5. மக்கள் மெய்தொடல் மாண இனிதே
மலர்வாய் மணக்கும் மாற்றம்
இணங்கிக் கேட்டல் இன்பம் செவிக்கே.

6. குழலே இனிது குலவுயாழ் இனிதே
எனறே எளிதின் இயம்புவர்
மக்கள் மழலை மடாஅ தாரே.

7. தந்தை என்பான் தன்மகற்(கு) ஆற்றும்
நன்றி யாதெனை நவிலின்
அவையின் மிக்க அறிவனச் செயலே.

8. மக்கள் மறுவிலா மல்லல் அறிவு
மாநிலம் வாழும் மன்னுயிர்க்(கு)
எல்லாந் தம்மினும் என்றும இனிதே.

9. பெற்ற பொழுதினும் பெரிது மகிழ்வாள்
கல்வியால் நிறைந்த கடலை
அறிவர் சொல்ல அறிந்த தாயே.

10. தந்தைக் காற்றும் தன்மகன் உதவி
இவற்குத் தந்தை இம்மையின்
செய்தவம் என்னெனச் செப்பும் சொல்லே.

மறைவுற்ற தமிழ்நூல்கள்

[மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி]

(சிலம்பு ௨௮, பரல் ௯, ௪௩௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

32. கோப்பத்துப் பரணி

சோழ அரசர் கொப்பம் என்னும ஊரில் சளுக்கிய அரச ருடன் போர செய்து பெற்ற வெற்றியைப் பாராட்டிக் கொப் பத்துப்பரணி என்னும் நூல் பாடப்பெற்றது. இச்செய்தியை இராசராச சோழனுலாவினால் அறியலாம். என்னை?

> " . . ..கொலையானை
> பப்பத் தொருபசிப்பேய் பெற்ற வொருபரணி
> கொப்பத் தொருகளிற்றாற் கொண்டகோன்."

எனக் கூறப்படுவது காண்க இந்தக் கொபபததுப பரணி இப்போது கிடைக்கவில்லை. இந்நூலை இயற்றியவர் பெயர் முதலியனவும் தெரியவில்லை.

33. "தேன்றமிழ்த் தேய்வப் பரணி"

இப்பெயருள்ள பரணி நூலைப்பற்றித் தக்கயாகப்பரணி 776-ஆம தாழிசை கூறுகிறது. என்னை?

> "செருத்தந் தரித்துக் கலிஙக ரோடத
> தேன்றமிழ்த் தேய்வப் பரணி கொணடு
> வருத்தந தவிரத்தல காணட பிரான்
> மைந்தர்க்கு மைந்தனை வாழ்த்தினவே."

இததாழிசைககு உரை எழுதிய, பெயர் அறியப்படாத பழைய உரையாசிரியர், "இப்பரணி பாடினார் ஒட்டக்கூத்தரான கவிச்சக்கரவர்த்திகள். இப்பரணி பாட்டுண்டாா விக்ரமசோழ தேவர்" என்று எழுதுகிறார்.

இதனால், கலிங்கபபோரைப் பாராட்டிச் செயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி பாடியதுபோலவே, அதே கலிங்கப்போரைப் பாராட்டி ஒட்டககூத்தர் விக்கிரமசோழன்மீது இந்தப் பரணி யைப் பாடினார் என்று தெரிகிறது. இந்தப் பரணியின் பெயர் தெரியவில்லை. ஆனால், ஒட்டக்கூத்தராலேயே தென்றமிழ்த் தெய்வப்பரணி என்று தமது தக்கயாகப் பரணியில் கூறப்பட்ட படியால், அதே தலைப்பெயரை இந்தப் பரணிக்குச் சூட்டினம். ஒட்டக்கூததர் விககிரமசோழன்மீது, விக்கிரமசோழனுலா என் னும் நூலை இயற்றியிருப்பதும், அவர் அவனது அவைக்களப்

புலவராக இருந்தனர் என்பதும் கருதத்தக்கது. ஒட்டக்கூத்தர் இயற்றிய தென்றமிழ்த் தெய்வப்பரணி இப்போது கிடைக்கவில்லை.

34. கூடலசங்கமத்துப் பரணி

கூடலசங்கமத்துப் பரணி என்னும் ஒரு பரணி நூல் இருந்தது என்பதை விக்கிரமசோழனுலாவினாலும், இராசராசசோழனுலாவினாலும் அறிகிறோம். சோழர்கள் கூடலசங்கமம் என்னும் இடத்தில் பகைவேந்தருடன் போர்செய்து பெற்ற வெற்றியைப் பாராட்டி இந்தப் பரணி பாடப்பெற்றது என்று தெரிகிறது. என்னை?

"... ... ... கூடல்
சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனும்"

என்று விக்கிரமசோழனுலா கூறுகிறது.

"... ... ...ஒப்பொருவர்
பாடவரிய பரணி பகட்டணி வீழ
கூடலார் சங்கமத்துக் கொண்டகோன்."

என்று இராசராசசோழனுலா கூறுகிறது.

இந்தப் பரணி யாரால் செய்யப்பட்டது என்பது தெரியவில்லை. நூலும் கிடைக்கவில்லை.

35. இராமாயணம்

இப்பெயரைக் கண்டவுடன் கம்பராமாயணமோ என்று கருதவேண்டா. இது கம்பராமாயணத்தின் வேறானது. இதனை யாப்பருங்கலம் செய்யுளியல் 9-ஆம் சூத்திர உரையில், விருத்தியுரைகாரர் குறிப்பிடுகிறார். "இன்னும் பலவடியான் வந்த பஃறொடை வெண்பா இராமாயணமும் புராணசாகரமும் முதலாகவுடைய செய்யுட்களில் கண்டுகொள்க" என்று அவர் எழுதுகிறார். இதனால், இந்த இராமாயணம் வெண்பா யாப்பினால் இயற்றப்பட்டநூல் என்பதும், இதில் பலவடியால் வந்த பஃறொடை வெண்பாக்கள் இருந்தன என்பதும் தெரிகின்றன. இந்நூலைப்பற்றிய வேறு செய்திகள் தெரியவில்லை.

36. புராணசாகரம்

யாப்பருங்கலம் செய்யுளியல் 9-ஆம் சூத்திர உரையில், உரையாசிரியர் இப்பெயருள்ள நூலைக் குறிப்பிடுகிறார். "இன்னும் பலவடியால் வந்த பஃறொடை வெண்பா இராமாயணமும்,

புராணசாகரமும் முதலாகவுடைய செய்யுட்களிற் கண்டு கொள்க" என்று அவர் எழுதுவது காண்க.

இதனால், புராணசாகரம என்னும் நூல் வெண்பாவினால் அமைந்த நூல் என்பதும, இதில் பஃறொடை வெண்பாக்களும் இருந்தன என்பதும தெரிகின்றன.

இந்நூலாசிரியர் பெயர் முதலிய ஒன்றும் தெரியவில்லை.

37. திரையக்காணம்

இது ஒரு சோதிட நூல என்று தெரிகிறது யாப்பருங்கல உரையாசிரியர் இந்நூலைக் குறிப்பிடுகிறார் (யாப்பருங்கலம், ஒழிபியல் 2-ஆம் சூத்திர உரை) இந்நூலிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு செய்யுட்களை உரையாசிரியர் மேற்கோள் காட்டுகிறார்:

"பூமன் றெறுகதிரோன் பொனகாரி யொண்புகரோன்
வாமப் புதன் வெளியோன் மாமந்தன்—சோமன்சேய்
சந்திரனே செவ்வாய் சதமகனறன் மந்திரியே
யந்திரையைக் காணமாள் வார்."

"ஆடரிவி லாகிநடு வந்தமுறை சேயிரவி யம்பொனியலும்
சேடிசுற வேறுசனி வெள்ளிபுத னள்ளுமெறி தேள்வலவன்மீ
னேடுமுயல் திங்களினே டஙகிகுரு வுணடலுணர் நண்டு துலைநீர்
மூடுகுட மோடுபுகர் காரிபுத னேரிதனை யுணணு முறையே."

"இவையு முய்த்துணர் திரனிறை. இவ்விரண்டுந் திரையக் காணம் ஓரிராசி முமமூனறாக ஓட்டிக்கொள்க" என்று உரையாசிரியர் எழுதுகிறார.

இந்நூலைபபற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

38. அமிர்தபதி

இபபெயரிலுள்ள ஒரு நூலை யாப்பருங்கல உரையாசிரியர், (யாப்பருங்கலம ஒழிபியல்) குறிப்பிடுகிறார்.

"சிந்தாமணி, சூளாமணி, குண்டலகேசி, நீலகேசி, அமிர்த பதி என்றிவறறின் முதற்பாட்டு வணணத்தால் வருவன. அவற்றில நேரசை முதலாய் வரின் ஓரடி பதினான்கெழுத்தாம். நிரையசை முதலாய் வரின் ஓரடி பதினைந்தெழுத்தாம்."

என்று அவர் எழுதுகிறார. இதனால், அமிர்தபதியின் முதற்பாட்டு வண்ணச் செய்யுள் என்பது தெரிகிறது.

இந்நூல் ஆசிரியர் யார், இது எதைப்பற்றிய நூல் என்பன ஒன்றும் தெரியவில்லை.

39. அவிநந்தமாலை 40. அரசசட்டம் 41. வருத்தமானம்

இவை கணித நூல்கள். யாப்பருங்கல விருத்தியுரைகாரர் இந்நூல்களைத் தமது உரையில் (ஒழிபியல்) குறிப்பிடுகிறார். அவர் எழுதுவது இது:—

"இனி, எண் இரண்டுவகைய, கணிதமும் காரணமும் என. அவற்றுட் கணிதமாவன பதினாறு வரி கருமமும், ஆறு கலாச வருணமும், இரண்டு பிரகரணச் சாதியும், சதகுபைமயும், ஐங்குபைமயும் என்றிப் பரிகருமமும், மிச்சிரகமு முதலாகிய எட்டதிகாரமும். அவை அவிநந்தமாலையும், அரசசட்டமும், வருத்தமானமும் முதலியவற்றுட் காண்க."

இந்நூல்கள் எக்காலத்தில் யாரால் செய்யப்பட்டன என்பன யாதொன்றும் தெரியவில்லை.

42. பரிப்பெருமாள் இலக்கண நூல்

திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மருள், பரிப்பெருமாள் என்பவரும் ஒருவர். இவர் ஓர் இலக்கண நூலையும் இயற்றினார் என்று அறிகிறோம். என்னை? "தெள்ளி மொழியியலைத் தேர்ந்துரைத்துத் தேமொழியார், ஒள்ளிய காமநூலோர்ந்துரைத்து,—வள்ளுவனார், பொய்யற்ற முப்பால் பொருளுரைத்தான் தென்செழுவைத், தெய்வப் பரிப்பெருமாள் தேர்ந்து" என்று இவர் எழுதிய திருக்குறள் உரைப்பாயிரச் செய்யுள் கூறுவது காண்க. இவர் செய்த இலக்கணநூலின் பெயர் முதலியன தெரியவில்லை.

43. பரிப்பெருமாள் காமநூல்

திருக்குறள் உரையாசிரியர்களில் ஒருவராகிய பரிப்பெருமாள் காமநூல் ஒன்று இயற்றினார் என்று அவரது உரைப்பாயிரச் செய்யுள் கூறுகிறது: 'தெள்ளி மொழியியலைத் தேர்ந்துரைத்துத் தேமொழியார், ஒள்ளிய காமநூல் ஓர்ந்துரைத்து—வள்ளுவனார் பொய்யற்ற முப்பால் பொருளுரைத்தான் தென்செழுவைத் தெய்வப் பரிப்பெருமாள் தேர்ந்து' என்பது அச்செய்யுள். இந்தக் காமநூலின் பெயர் என்னவென்று தெரியவில்லை. இந்நூல் இப்போது கிடைக்கவில்லை.

44. திருவதிகைக் கலம்பகம்

இந்தக் கலம்பகம் திருவதிகை வீரட்டானேசுவரர் பேரில் பாடப்பட்டது. திருவதிகை, தென்னாற்காடு சில்லா கடலூர்த் தாலுகாவில் உள்ளது. திருவதிகைக் கோவிலில் உள்ள கல்வெட்டுச் சாசனம் ஒன்று இந்நூலையும் இந்நூலாசிரியரையும்

கூறுகிறது. இந்தச் சாசனம் சகஆண்டு 1458, துன்முகி ஆடி 10உ எழுதப்பட்டது அஃதாவது கி. பி. 1536-இல் இது எழுதப்பட்டது. உத்தரமேரூரில் மகிபாலகுலசேரி என்னும் தெருவில் வாழ்ந்துவந்த உத்தண்ட வேலாயுத பாரதி என்பவர் இந்நூலை இயற்றினார் என்று இச்சாசனம் கூறுகிறது. தொண்டைமண்டலத்துக் காலியூர்க் கோட்டத்து ராஜேந்திர சோழ சதுர்வேதிமங்கலம் என்னும் உத்தரமேரூர் என்று இந்தச் சாசனம் இவர் ஊரைக் கூறுகிறது மேலும், கௌண்டின்ய கோத்திரத்து ஆபஸ்தம்ப சூத்திரத்து வீரவல்லி தேவராசபட்டா காசிநாத குபையன் என்னும் உத்தண்ட வேலாயுத பாரதி என்று இவர் பெயரைக் கூறுகிறது

இந்தக் கலம்பகம் பாடியதற்காக 2 மா நன்செய் நிலமும் 1 மா புன்செய் நிலமும், திருவதிகை நகரத்துக் கோட்டைக்குள் இருந்த அக்கிரகாரத்தில் ஒரு வீடும் இந்தப் புலவருக்குத் தானம் செய்யப்பட்டன (376 of 1921., Annual Report of Epigraphy, Madras, 1922 Page 99) திருவதிகைக் கலம்பகம் இப்போது கிடைக்கவில்லை

45 வீரமாலை

வீரமாலை என்னும் நூலைப் புலவர் பாண்டி கவிராசர் என்பவர் இயற்றினார் என்னும் செய்தி, புதுக்கோட்டையில் உள்ள ஒரு கல் எழுத்துச் சாசனத்தினால் தெரிகிறது. இந்தச் சாசனம் புதுக்கோட்டை திருமய்யம் தாலுகா ராங்கியம் என்னும் ஊரில் உள்ள பூமீசுவரர் கோவிலின் தென்புறச் சுவரில் இருக்கிறது. இந்தச் சாசனத்தின் வாசகம் இது:

"உ. ரௌத்திரி வருஷம் தைய் மாதம் ௩௦உ. ஸ்ரீமது வெங்கள நாயக்கரய்யன் காரியத்துக்கு கர்த்தரான தீத்தாரி யப்பரும் பொன்னமராபதி நாட்டுத் தென்பற்று இராசிமங்கலம் ஊரவரும் புலவர் பாண்டி கவிராசர் வீரமாலை பாடுகையில் இவர்க்கு இறையிலியாக விட்ட நிலம் மறவனேரி வயலில் வெம்படிப் புலவர் செய் அஞ்சாள் நடுகையும் சந்திராதித்தர் வரைக்குபற்றி அனுபவிக்கக் கடவராகவும். இதுக்கு யாதாமொருத்தர் இதுக்கு இரண்டு நினைத்தவன் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோசத்திலே போகக் கடவராகவும். இப்படிக்கு ஏறக்குடையான் ஆனை பொய்சொல்லா மெய்யன் எழுத்து." (Inscriptions (Texts) of the Pudukkottai State No. 966.)

இந்தச் சாசனத்தினால், வெங்கள நாயக்கரய்யன் மீது இந்த வீரமாலை பாடப்பட்டது என்பது தெரிகிறது. வெங்கள

நாயக்கர் கி. பி. 16-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் இருந்தவர் என்று தெரிகிறபடியால இந்நூல் அக்காலத்தில் இயற்றப்பட்டதாதல் வேண்டும். இந்நூல் இப்போது கிடைக்கவில்லை.

46- பூம்புலியூர் நாடகம்

தென் ஆர்க்காடு ஜில்லா கடலூர்த் தாலுகா திருப்பாதிரிப்புலியூரில் உள்ள பாடலிபுரீசுவரர் கோவில் கல்வெட்டுச் சாசனங்களினால் இந்நூலின் பெயர் தெரியவருகிறது. வீரைத்தலைவன் பரசமய கோளரி மாமுனி எனபவர் இந்நூலை எழுதியவர் குலோத்துங்க சோழதேவர் என்னும் முதலாம குலோத்துங்கன் காலததில் இவா இருநதவா இநத அரசனுடைய 41, 49-ஆம் ஆண்டுகளில இந்தச சாசனஙகள் எழுதப்பட்டன. இநதச் சாசனங்கள் செய்யுள நடையில எழுதபபட்டுள்ளன. இந்த நூலாசிரியர், கன்னிவன புராணம அஷ்டதச புராணம் என்னும் வேறு இரண்டு நூல்களையும எழுதியிருக்கிறார் இந நூல்களை எழுதியதற்காக இவர் பாலையூரில் நிலஙகளை இறையிலியாகப் பெற்றார்.

ஷை கோயில் சாசனச் செய்யுளகளில் இது ஒன்று —

"மாங்கொல்லை .. ..ரண்டு மா வொருமா முக்காணி
யோங்கு மறப்பெருஞ் செல்வி யொருகாணி .. .. ..
பூவமா காணியினிற் பூம்புலியூர் நாடகஞ் செய்
நாவலன் பெற்ற நிலம்."

(No. 753 Page 332. South Indian Insciiptions Vol VII)

இந்தச் சாசனச் செய்யுளில் இடையிடையே சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

இந்த நாடகநூல் இப்போது கிடைக்கவில்லை.

47. கன்னிவன புராணம். 48. அஷ்டதச புராணம்.

ஷை பூம்புலியூர் நாடகம் இயற்றிய வீரைத் தலைவன் பரசமய கோளரிமாமுனி என்பவரே இநத இரண்டு புராணங்களையும் இயற்றினா. இந்தச் செய்தியைத திருப்பாதிரிபபுலியூரில் உள்ள பாடலிபுரீசுவரர் கோவில் கல்வெட்டுச் சாசனம கூறுகிறது இநதச சாசனஙகள் செய்யுள் நடையில் இயற்றப்பட்டுளளன. இக்கல் வெட்டுகளில் இடையிடையே எழுததுக்கள் சிதைந்தும் மறைநதும் கிடப்பதால நன்கு வாசிக்கமுடியவில்லை. குலோத்துங்க சோழ தேவர் என்னும் முதலாங் குலோத்துங்கனுடைய 41, 49-ஆம ஆட்சி ஆண்டுகளில் இந்தச் சாசனஙகள் எழுதப்பட்டன. கன்னிவன புராணம அஷ்டதசபுராணம் பூம்

புலியூர் நாடகம் என்னும் நூல்களை இயற்றியதற்காக இந்நூலாசிரியருக்குப் பாலையூரில் நிலம் தானம் செய்யப்பட்ட செய்தியை இந்தச் சாசனக் கவிகள் கூறுகின்றன:—

ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ௪௧௯.

தழைத்த திருப்பாதிரிப் . . . ன வீரை தலைவ
னிருடைப் பரசமய கோளரி மாமுனிக்கு
கொழித்த வஷ்ட தச புராணங்க தானங்
கன்னிவன புராணம்
வழுத்தடி காட்டு தயானந்த மவருந்தி
பாலையூரு . . .யிருபூவிளையுநி
பழுத்துமறை தனமா யுள்ளளவு முணவிறையிலி
யாமவகை தந்தோ மிரண்டு மாவே.

(No. 751. Page 382. South Indian Inscriptions Vol. VII)

ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ௪௧௧.

திருவாழுங் கறைஞாழற் சினை மருதம் .
சாசனந் தென்மருதம பகைக
கருவாழ வருங்கமலாலயற்குக் கன்னிவன
புராணம் பாடிப் பரிசி . . . .
வாடுந் நாடகமுஞ் செய்தாற்கு சிறப்பாம் பாலை
யூரினிலிருபூவும விளையும் ஒருமாநன்நில
பருங்கொழு கிளையினொடு மூழிதொறு மிறை
யிலியே யுரைத்தானேய்.

(No 753. Page 382. South Indian Inscriptions Vol. VII)

சிதைந்து காணப்படுகிற இந்தச் செய்யுளினால் அறியப்படுவது என்னவென்றால், வீரைத்தலைவன் பரசமய கோளரியார் என்பவர் கன்னிவனபுராணம், அஷ்டதசபுராணம் பூமபுலியூர் நாடகம் என்னும் மூன்று நூலகளை இயற்றினமைக்காகப் பாலையூரில் நிலம் இறையிலியாகத் தானம் பெற்றார் என்பது.

இந்த நூல்கள் இப்போது கிடைக்கவில்லை.

49 காங்கேயன் பிள்ளைக் கவி

இராமநாதபுரம் ஜில்லா திருப்புத்தூர் தாலுகா பெரிச்சிக் கோவில் என்னும் ஊரில் உள்ள சுந்தரவனேசுவரர் கோவில் சாசனம் ஒன்று காங்கேயன் பிள்ளைக்கவி என்னும் நூலைக்

குறிக்கிறது. 75 of 1924., Annual Report of South Indian Epigraphy 1923—24. Page 107.)

பாண்டியன மாறவர்மன் ஆன திரிபுவன சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவரின் 14-ஆவது ஆட்சி ஆண்டில் இந்தச் சாசனம் எழுதப்பட்டது. கண்டன் உதயஞ் செய்தான் காஙகேயன் எனனும சிற்றரசன்மீது பிள்ளைக் கவி (பிள்ளைத் தமிழ்.) நூலைக் கொடிகொண்டான் பெரியான் ஆதிசசதேவன் என்னும் புலவா பாடியதையும அதற்காக அக் காஙகேயன் இப்புலவருககுச் சாத்தனேரி என்னும் ஊரில் நிலம பரிசளித்ததையும இந்தச் சாசனம் கூறுகிறது.

இந்தச் சாசனம் கூறுகிற பாண்டியன் கி பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில இருந்தவன். ஆகவே, காஙகேயனும அவனைப் பாடிய ஆதிசச தேவரும அதேகாலததில இருநதவர் ஆவர்.

இப்பிள்ளைக் கவி இபபோது கிடைக்கவில்லை.

50. வஞ்சிப் பாட்டு 51. மோதிரப் பாட்டு 52 கடகண்டு

பேராசிரியர், தொல்காபபிய உரையில் இநநூல்களைக் குறிப்பிடுகிறார். தொல் பொருள். செயயுளியல் 180-ஆம் சூத்திரத்தில் பண்ணத்தி என்பதை விளக்குகிற இடத்தில் பேராசிரியா இந்நூல்களைக் கூறுகிறார். அவா கூறுவது இது:

"மெய்வழக்கல்லாத புறவழககினைப் பண்ணத்தியென்ப. இது எழுதும பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருள்களைப் பண்ணததியென்ப வெனபது. அவையாவன நாடகச செய்யுளாகிய பாடடுமடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப்பாட்டும கடகண்டும முதலாயின. அவற்றை மேலதே போலப பாட்டென்றாயினுா நோக்கு முதலாயின உறுப்பின்மையினென்பது. அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க."

இதனால், மோதிரப்பாட்டு, வஞ்சிப்பாட்டு, கடகண்டு என்பன நாடகம் பறறிய நூல்கள் எனத தெரிகின்றன

இவை இப்போது கிடைக்கவில்லை.

53. தேசிகமாலை

யாப்பருங்கல உரையாசிரியர், தொடையோத்து 52-ஆம் சூத்திர உரையில் தேசிகமாலை என்னும நூலைக் குறிபபிடுகிறார். அவர் எழுதுவது வருமாறு:

"பன்மணிமாலையும் மும்மணிக்கோவையும் உதயணன் கதையும் தேசிகமாலையும் முதலாகவுடைய தொடர்நிலைச் செய்யுட்களும அந்தாதியாய் வநதவாறு கண்டுகொள்க."

இவர் கூறுகிற பன்மணிமாலையும் மும்மணிக்கோவையும் எவை என்பது தெரிவில்லை. ஏனென்றால் இப்போது பல பனமணிமாலைகளும் மும்மணிக்கோவைகளும் உள்ளன. இவை இப்போதுள்ளவைகளின் வேறுபட்ட நூல்களா எனபது தெரியவில்லை. உதயணன்கதை என்பது பெருங்கதை. அது இபபோது இருக்கிறது தேசிகமாலை என்னும அந்தாதித் தொடர்நிலைச் செயயுள் இப்போது கிடைக்கவில்லை.

தேசிகமாலை யாரால் செய்யப்பட்டது, எதைப்பற்றிக் கூறுவது, எப்போது இயற்றப்பட்டது என்பன தெரியவில்லை.

54. அறம் வளர்த்த முதலியார கலம்பகம்

இப்பெயருளள ஒரு நூல் இருந்தது என்பதைத் தமிழ் நாவலர் சரிதையிலிருநது தெரிந்துகொள்ளலாம்.

"அறம வளர்தத முதலியாரைப் பாண்டியன் கலம்பகம் பாடலாமோ" என்று கேட்ட ஒரு புலவர்க்குப பாண்டியன் கீழ்க்கண்ட செய்யுளைப பாடி விடையிறுத்தார என்று தமிழ் நாவலர் சரிதை கூறுகிறது:

"உங்கண் மனந் தெரியும் புலவீர், ஒருசீர மரபோம் திஙகண் மரபினம் திஙகளின் கூடச செம்பூறமா துங்கன் மரபிற் கஙகையுஞ் சூடினன் சோதியன்றோ? எஙகண மரபுண்டெனக் கவிபாடினம் யாமவறகே."

இச்செய்யுளில் செம்பூறமாதுஙகன் என்பது செமபூர் அறம் வளாதத முதலியாரைக் குறிக்கிறது செமபூர் அறம் வளர்த்த முதலியார் விஜயநகர அரசரின அமைச்சராக ஹம்பி நகரததில் இருநதவர். இவரை அம்பி (ஹமபி) அறம் வளர்த்த முதலியார எனறும் கூறுவர்

இவர்மீது பிற்காலத்துப் பாண்டியர் ஒருவர் கலம்பகம் பாடினார். அதையறிநத ஒரு புலவா அரசராகிய நீர மற்ற வரைப பாடலாமோ என்று வினவினார் அதறகு விடையாக இந்தப் பாட்டைப்பாணடியன் பாடினார் இச்செயயுளின் கருத்து இது: சிவபெருமான் திங்களையும் கஙகையையும் தமது திருச் சடையில்சூடினார். ஆகவே திங்கள் மரபினராகிய பாண்டியருக் கும் கஙகை குலத்தவராகிய அறம் வளர்த்த முதலியாருக்கும் தொடர்பு உண்டு. இத்தொடர்பு பற்றித்தான் அவர்மீது கலமபகம பாடினேன் என்பது.

கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் விஜயநகர ஆட்சி இருந்தபடியினாலே இக்கலம்பகம் அந்நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

இந்தக் கலம்பகம் இப்போது கிடைக்கவில்லை,

55. புட்கரனார் மந்திரநூல்

இப்பெயருள்ள நூலை யாப்பருங்கல விருத்தியுரைகாரர் குறிப்பிடுகிறார். யாப்பருங்கலம் செய்யுளியல் 40-ஆம் சூத்திர உரையில், ஆசிடப்போலி அல்லது ஆரிடவாசகம் என்பதைக் கூறும்போதும் இவ்வாறு கூறுகிறார் :—

"வச்சிரம் வாவி நிறைமதி முக்குடை
நெற்றி நோ வாயகல் விலங்கறுத்தல்
உட்சக்கர வட்டத் தட்புள்ளி யென்பதே
புட்கரனார் கண்ட புணர்ப்பு"

இது மந்திர நூலுட் புட்கரனார் கண்ட வெழுத்துக்குறி வெண்பா. இஃதிரண்டாமடி குறைந்து வந்தது.

இதனை ஆரிடவாசகம் என்பதனாலே ரிஷிவாக்கு என்பது தெரிகிறது. ஆரிடவாசகம் = இருடி வாக்கு.

இந் நூலைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

56. புணாப்பாவை 57. போக்கியம் 58. கிரணியம் 59. வதுவிச்சை

யாப்பருங்கல விருத்தியுரைகாரர் இந்நூல்களைக் குறிப்பிடுகிறார். யாப்பருங்கலம் ஒழிபியலில் சித்திர கவிகளைப்பற்றிக் கூறுகிற இடத்தில இந் நூல்களைக் கூறுகிறார் உரையாசிரியர் எழுதுவது இது :

"இதனுட் சக்கரம் என்றதனானே பூமி சக்கரமும், ஆகாயச் சக்கரமும், பூமியாகாயச் சக்கரமும், வட்டச் சக்கரமும், புருடச் சக்கரமும், சதுரச் சக்கரமும், கூர்மச் சக்கரமும், மந்தரச் சக்கரமும், காடகச் சக்கரமும், சனிபுருடச் சக்கரமும், சலாபச் சக்கரமும் முதலாக வுடையன புணர்ப்பாவையுள்ளும் போக்கியத்துள்ளும் கிரணியத்துள்ளும் வதுவிச்சையுள்ளும் கண்டுகொள்க."

இதனால் இப் பெயருள்ள நூல்கள் இருந்தன என்பதும் இவை சித்திரகவியைச் சேர்ந்தவை என்பதும் தெரிகின்றன. இவற்றை இயற்றியவர் யாவர் என்பதும் எக் காலத்தில் இயற்றப்பட்டன என்பதும் தெரியவில்லை.

60. மஞ்சரிப்பா

இப்பெயருள்ள ஒரு நூல் இருந்ததென்பதைத் தொண்டை மண்டல சதகத்தினால் அறிகிறோம்.

வானப்ர காசப் புகழ்க் கிருட்டின ராயர்க்கு மஞ்சரிப்பா
கானப்ர காசப் புகழாய்ந்து கச்சிக் கலம்பகஞ்செய்
ஞானப்ர காச குரு ராயன் வாழ்ந்து நலஞ்சிறந்த
மானப்ர காச முடையோர் வளர்தொண்டை மண்டலமே

என்பது அப்பாடல்.

காஞ்சிபுரத்தில் இருந்தவரும் கச்சிக் கலம்பகம் இயற்றியவருமான ஞானப்பிரகாசர் என்னும் பெயருள்ள ஆசாரியர் கிருட்டினராயர்மீது **மஞ்சரிப்பா** என்னும் நூலை இயற்றினார் என்று தெரிகிறது. கிருட்டினராயர் என்பவர் கிருட்டின தேவராயர் என்னும் பெயருடைய விஜயநகரத்து அரசர் ஆவார். இவர் கி. பி. 1509 முதல் 1529 வரையில் அரசாண்டார். எனவே 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்நூல் இயற்றப்பட்டது.

மஞ்சரிப்பா இப்போது கிடைக்கவில்லை.

61. கோட்டீசர உலா

கோட்டீசர உலாவிற்கு கொட்டையூருலா என்றும் வேறு பெயர் உண்டு. கோட்டீச்சரம் என்பது கொட்டையூர். இவ்வூர் கும்பகோணத்திற்கு அருகில் இருக்கிறது. கோட்டீச்சர உலாவை இயற்றியவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் என்பவர்.

இவர் முத்தமிழ்ப் புலவர். தஞ்சையை அரசாண்ட மகாராட்டிர அரசரான சரபோஜி மகாராஜாவின் (1798—1832) அரண்மனைப் புலவராக இருந்தவர். தஞ்சையில் சரஸ்வதி மகால் என்னும் பெயருடன் சரபோஜி மன்னர் அமைத்த புத்தகசாலைக்கு இவர் ஏட்டுச் சுவடிகளைத் தேடிக்கொடுத்தார். பின்னர், சென்னை அரசாங்கத்தார் அக்காலத்தில் நடாத்திவந்த சென்னைக் கல்விச் சங்கத்தில் தமிழாசிரியராக இருந்தார்.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் கோடீசரக்கோவை, தஞ்சைப் பெருவுடையாருலா, சரபேந்திர பூபால குறவஞ்சி, திருவிடைமருதூர்ப் புராணம், பெருமணநல்லூர்ப் புராணம் பல தனிச் செய்யுள்கள் முதலியவைகளை இயற்றினார்.

இவர் இயற்றிய கோடீசர உலா இப்போது கிடைக்கவில்லை; மறைந்துவிட்டது போலும்.

62. சிற்றிசை 63. பேரிசை

இப் பெயருள்ள இரண்டு இசைத்தமிழ் நூல்களை இறைய னார் அகப்பொருள் உரையாசிரியர் குறிப்பிடுகிறார் இவ் வுரை யாசிரியர் எழுதுவதாவது :—

"அவர்களால் (கடைச்சங்கத்தாரால்) பாடப்பட்டன நெடுந் தொகை நானூறும் குறுந்தொகை நானூறும் நற்றிணை நானூ றும் புறநானூறும் ஐங்குறுநூறும் பதிற்றுப் பத்தும் நூற் றைம்பது கலியும் எழுபது பரிபாடலும் கூத்தும் வரியும் சிற்றிசை யும் பேரிசையும் என்று இத் தொடக்கத்தன"

இது இறையனார் அகப்பொருள் உரைப் பாயிரம்

இதில் கூறப்பட்ட சிற்றிசை பேரிசை என்னும் நூல்கள இப்போது கிடைக்கவில்லை. இவை இசைத்தமிழ் நூல்கள்.

தொல். பொருள் செய்யுளில் 153-ஆம் சூத்திர உரையில், பேராசிரியர் இவ்வாறு எழுதுகிறார் :

"கந்தருவ மார்க்கத்து (இசைத் தமிழில) வரியும் சிற்றிசை யும் பேரிசையும் முதலாயினபோலச் செந்துறைப் பகுதிக்கே உரியவாகி வருவனவும கூத்தநூலும் வெண்டுறையும் அரங்கத் திற்கே யுரியவாகி வருவனவும் எண்டுக் கூறிய செய்யுள்போல வேறு பாடப்பெறும் வழக்கின என்பது கருத்து"

தொல். பொருள் செய்யுளியல் 172-ஆம் சூத்திர உரையில் இளம்பூரண அடிகள் இவ்வாறு எழுதுகிறார் :—

"பண்ணைத் தோற்றுவித்தலாற் பண்ணத்தி என்றார். அவை யாவன சிற்றிசையும் பேரிசையு முதலாக இசைத் தமிழில் ஓதப் படுவன," என்று எழுதினார்.

பேராசிரியரும் இளம்பூரண அடிகளும் தமது உரைகளில் கூறுகிற சிற்றிசை பேரிசை என்பன இசைப்பகுதிகள் ஆகும்; நூலின் பெயர்கள் அல்ல. ஆனால், இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் கூறும் சிற்றிசை பேரிசை என்பன இசையைப் பற்றிய நூல்கள் என்பது ஐயமற விளங்குகிறது.

(தொடரும்)

திருநாட்டின் திருநெறி

[பன்மொழிப் புலவர், திரு. கா. அப்பாத்துரை எம்.ஏ.எல்.டி.]

நாகரிக உலகின் அடிநிலப்பாறை தமிழின நாகரிகமாகிய திராவிட நாகரிகமே. மேனாட்டு நாகரிகததின தொலை வேரையும் கீழநாட்டு நாகரிகஙகளின் அடிமரங்களையும நாம இதில் காணககூடும. ஆயினும நாகரிக உலகின் பாாவையிலிருந்து அது நீண்டகாலமாக மறைக்கப்பட்டு வநதுள்ளது. கீழநாடுகளின் சமய, சமூக, அரசியல் ஆட்சி வகுப்பினா ஆதிக்க நலங்களின் அறியாப் பிழைகளாலும அறிபிழைகளாலும் தாம அறிந்தும பிறா அறியவொட்டாமல் தடுககும மாறுட்டங்களாலும அது திரையிட்டு மூடபபட்டு வருகிறது. இந்நிலையிலும் இவ் அடிநிலப் பாறையின் தனிப பணபை—கலபபற்ற தூய பண்ணினை—எடுததுக காட்டும் பல தனிப் படைப்புக்களும் தனிப்பட்ட முழுநிறை துறைகளும நம்மிடையே உள்ளன. தனிப் படைபபுக்களுள் தெய்வத் திருக்குறள் ஒன்று; செநதமிழின் முந்து தமிழிலக்கணமாகிய தொல்காப்பியம் மற்றொன்று தனிப்பட்ட முழுநிறை துறைகளுள் சித்தர் மருந்து நெறி, வாளக மெய்க்காட்சி நெறி, ஓவிய மெய்ப்பாட்டு நெறி, தமிழிசை, தமிழ் ஆடல் நெறி, தமிழ் நாடக நெறி, தமிழ்ச்சஙக இலக்கியம் ஆகியவைகள் குறிபபிடத் தககவை. இவற்றிடையே மிடைநது துதைந்து, மிளிர்ந்து விளைநது, இவறறுடன தனித்தமிழ் நெறிகளாக எண்ணத்தக்க சிறப்புடையது, 'முடிநததன் முடிபு,' என்ற சிறப்புப் பெயர்கொண்ட வேதாந்த சித்தாநத நெறி என்னும் திருநெறி.

'நம் சமயம்,' 'நம் நாகரிகம்,' 'நம் நாடு' என்று கூறிக் கொண்டே பசுததோல் போர்த்தவாகளாய் இவற்றைப் பாராமுகமாய் மறக்கடித்தவர்களாய், தமிழன்னையின் மனம் நைய, தமிழார்வலா தகையழிய, தமிழினத் தொண்டர் வெம்பி வெதும்ப, அயற்பண்பை வருந்தி மேற்சென்று பேணுபவர் இன்று எத்தனை பேர்? மருந்துக்கும் தமிழ்மொழி, தமிழ்ப் பண்பு பேணாத நம் நாட்டுக் கோயில்கள், மடங்கள், கலை நிலையங்களை வளர்க்கும சாக்கில் ஆயிர நூறாயிரம வெண்பொற் காசுகள் செலவிட்டு அயலாட்சிபேணித் தன்னலம் வளாக்கும், 'வீடணப் பெருந்தகையர்,' எத்தனை பேர்? ஆனால் உடன்பிறந்த நோய்

வருத்தினும், உடன்பிறவா மாமலை மருந்துண்டு அமையும் உடல்போல, அயல் இனத்தவர், அயல்மொழியினர், அயல் சமயத்தவர் காய்தல் உவத்தலற்ற ஆராய்ச்சியுரைகள் அன்னையின் புண்ணும் நம் அக வெப்பும் ஆற்றத்தக்கனவாயுள்ளன.

சைவ சித்தாந்தத்தைப்பற்றி ஆராய்ந்த தமிழக அறிஞர் ஒரு சிலராயினும் தலைசிறந்தவர்களே—எம் எஸ். பூரணலிங்கம் பிள்ளை, ஜே. எம் நல்லசாமிப் பிள்ளை, வி. பொன்னையா, பி. முத்தையா பிள்ளை, எஸ். சிவபாதசுந்தரம் ஆகிய தமிழ் ஒளிச் சுடர்கள் என்றும் மறக்கத்தக்கவையல்ல. ஆயினும் பெரும்பான்மைத் தமிழர்—தமிழினத்தவர்—தமிழினஞ் சூழ்ந்த அண்புலத்தவர் புறக்கணிப்பிடையே இவர்கள் ஆறுதல் தரினும், அப்புறக்கணிப்பை அகற்றவல்லரோ? அவரையே வகுப்புவாதிகள் குறுமதியாளர் எனக் கூறிக் குறைக்கும் இக் காலச் சூழ்நிலையில், அயலின மருத்துவர் உதவி, பெரிதும் வரவேற்கத் தக்கதாயுள்ளது. 'டொ சைவ சித்தாந்த,' என்ற ஜெர்மன் நூலின் ஆசிரியர் ஷோமரஸ், 'இந்தியக் கடவுள் நெறி,' இயற்றிய மெக்நிக்கால், 'சைவ சித்தாந்தத்தின் மெய்மை விளக்கம்,' தந்த ஜே எச். பீட். திருவாசக மொழி பெயர்த்துதவிய ஜி. யூ. போப், 'பாரத வருடத்தின் முதற் பழங்குடிகள்,' என்ற நூலாக்கிய ஆப்பாட், 'இந்திய நாகரிகத்தின் திராவிடப் பண்பு,' என்ற நூலின் ஆசிரியர் சிலேட்டர் ஆகியோரின் நட்புப் பகைமையற்ற நடுநிலை ஆராய்ச்சி முடிவுகள் திராவிட நாகரிகத்துக்கும் தமிழுக்கும் சைவ சித்தாந்தத்துக்கும் பேரரண் ஆவன.

கலைமுனைவர் (டாக்டர்) செல்வி பரஞ்சோதி அவர்கள் அண்மையில் வெளியிட்டுள்ள 'சைவசித்தாந்தம்' என்னும் நூல் இவ்வகையில் தனிச்சிறப்புடையது. அதன் முதல் பதிப்பு 1938-ல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அவரது கலை முனைவர் பட்டத்துக்குரிய தேர்வாராய்ச்சிக் கட்டுரையாக வெளியிடப்பட்டது. அப்பட்டம் பெறுவதற்குரிய தகுதியை அவ்வாராய்ச்சி ஏற்கெனவே அவருக்கு அளித்திருந்தது. பட்டம் பெற்ற பின்னும் அவர் தாமும் ஆராய்ச்சியிலீடுபட்டுப் பிற புதிய ஆராய்ச்சியாளர் முடிவுகளையும் ஆய்ந்து, புதுத் திருத்தங்களுடன் செப்பம்செய்து அதன் இரண்டாம் பதிப்பை இவ்வாண்டு (1954-ல்) வெளியிட்டுள்ளார். இரண்டு பதிப்புக்களும் அவர் நடுநிலையையும் அவர் உள்ளத்தில் புத்தாராய்ச்சிகளால் ஏற்படும் மாற்றத்தையும் நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றன.

தமிழர் சமயவாழ்வு முழுவதும் தமிழ்மொழி யாட்சிக்கும் தமிழ்ப்பண்புக்கும் தமிழர் நலங்களுக்கும் மாறுபட்டது என்று கருதி இன்று பலர் சமயவாழ்வைப் புறக்கணிக்கின்றனர்.

அத்துடன் அச் சமயவாழ்வு அடிப்படையிலேயே ஆரியச் சார்பானது என்ற எண்ணமும் பரவி வருகிறது. அதற்கேற்பச் சமயவாழ்வைப் புறக்கணிக்காதவர்கள் தமிழையும் தமிழ்ப் பண்பையும் புறக்கணிக்கவே செய்கின்றனர். இந்த மனப்பான்மையை இந்திய அறிஞர் உலகம் நிழற்படுத்திக் காட்டுகிறது. இவர்கள் சமயத்துறையில் சைவத்தையும், சித்தாந்தத்தையும் பெரிதும் புறக்கணிப்பது மட்டுமன்றி, இருட்டடிக்கவும் செய்யத் தவறவில்லை என்பதைக் காணலாம்.

வடமொழியில் 16-ம் நூற்றாண்டில் மாதவாசாரியார் என்ற தென்னாட்டு அறிஞர் சர்வதரிசனசங்கிரகம் என்ற நூல் எழுதியுள்ளார். அதில் ஆசிரியர் அறிந்த எல்லாச் சமயங்களும் கோட்பாடுகளும் விளக்கப்படுகிறது. அதில் ‘சைவதர்சனம்’ என்று ஒரேஒரு பகுதிதான் உண்டு. அதனுள்ளும் சித்தாந்தத்தின் பெயர்கிடையாது! இதுமட்டுமா? வடநாட்டு ஆராய்ச்சியறிஞரான ஆர். ஜி. பாண்டார்கார் 1919-ல் “வைணவம், சைவம் முதலிய சில்லறைச் சமயநெறிகள்” என்ற வரலாற்று ஆராய்ச்சி நூல் வரைந்துள்ளார். வைணவமும் சைவமும் இந்நாட்டின் சில்லறைச் சமயநெறிகளாகக் குறிக்கப்பட்டிருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது. அந்தச் சில்லறைச் சைவசமயத்தில் கூட சைவசித்தாந்தம் பற்றிய விளக்கம் எதுவும் கிடையாது. “சித்தாந்தம் என்ற பெயருடைய நெறி என்னதான் சொல்கிறது என்று அறிய வழியில்லை. அதன் நூல்கள் எதுவும் ஆராய்ச்சிக்குக் கிட்டவில்லை” என்று அவர் கூறுகிறார். நூல்கள் தமிழில் இருப்பதால், வடநாட்டவருக்குக் கிட்டவில்லை என்று முதலடியில் தோற்றும். ஆனால், இருபதாம் நூற்றாண்டில் பல சித்தாந்த நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு விட்டன. தவிர சிவஞானபோதம் முதலிய நூல்கள் வடமொழியிலிருந்தே மொழிபெயர்க்கப்பட்டதாகத் தமிழகத்தில் கருதப்பட்டிருந்ததையும் நினைவில் கொள்ளவேண்டும். இந்நூல்கள் தமிழுக்குரியன அல்ல என்று நாட்டத் தமிழகத்தில் உருவாக்கப்பட்ட வடமொழி ‘முதல் நூல்கள்’ வடவருக்கு மட்டும் பயன்படமுடியாதது ஏனோ?

இந்திய அறிஞரைப் பின்பற்றிப் பல மேனாட்டு அறிஞரும் பல தென்னாட்டறிஞரும்கூடச் சைவசித்தாந்தம்பற்றி மௌனம் சாதித்துள்ளனர். அதைப்பற்றிக் குறிப்பிட நேர்ந்தபோதும் அது இந்தியாவின் பிற கோட்பாடுகளின் ஒருநிழல், ஒருவகை பேதமாகவே முனைவர் (டாக்டர்) ராதாகிருஷ்ணன் போன்ற தென்னாட்டுப் பேரறிஞர்களால்கூட வேண்டாவெறுப்புடன் குறிப்பிடப்பட்டது.

ஆசிரியர் பரஞ்சோதி தமிழ் நூல்களைக் கற்றே சைவ சித்தாந்தம் பற்றி எழுதப்புகுந்தனரானாலும், எல்லா இந்திய அறிஞர்களையும் பின்பற்றிச் சங்கரரின் ஏகான்மவாதக் கண் கொண்டே முதற்பதிப்பில் சித்தாந்தத்தை விளக்கமுயன்றார். அந்த ஏகான்மவாதமே அதன் மூலமுதல் என்றும் அதன் பிற்கால வகைதிரிபே அது என்றும் அவர் கருதினார். ஆனால் ஆராய்ச்சியில் முனையுந்தோறும் இந்த எண்ணம் அவரிடம் மாறுபட்டு வந்தது. இரண்டாம் பதிப்பு வெளிவருவதற்குள் திராவிட நாகரிகம்பற்றியும் அதனுடன் சைவத்துக்கும் சித்தாந்தத்துக்கும் உள்ள தொடர்பு பற்றியும் பல புத்தாராய்ச்சிகள் வெளிவந்தன. இவற்றால் இரண்டாம் பதிப்பு பெரிதும் மாற்றப்பட்டது. சைவசித்தாந்தத்தின் பழமை, திராவிட நாகரிகத்துடன் அதற்குள்ள தொடர்பு, அதன் தனிமுதன்மை தனிச் சிறப்பு ஆகியவை தனித்தனி இயல்களில் அவ்விரண்டாம் பதிப்பில் விளக்கப்படுகின்றன.

வாழ்க்கையில் இரண்டு

[நெல்லை, திரு. க. சுப்பிரமணியன்]

நேரிசை யாசிரியப்பா

சென்னியங் கிரிமிசை நண்பரொடு ஏகிக்
கரந்தொடுங் கராவும் நந்தையும் அகத்த
துளைதா ஊஞ்சல் இளநிழல் தங்கி
மகிழ்வொடு மேயும் மறிக்கணம் நோக்கியும்
பூக்களும் தேனுண் ணாக்களுஞ் சூழப்
பன்னிற நன்னகம் பொருந்திய கன்மிசை
நன்மென காற்றினில் தோய்ந்து கண்துயின் றும்
நண்பகல் மீள்குவெம் யாமே! விடுமுறை
தண்ணறுஞ் சாரல் இன்னமை நுகர்ந்தும்
துறைத்தீந் தமிழ்நூல் உளங்கொளப் பயின்றும்
இனிய காண்டும் இவ இன்று நிலத்தே
இயற்கை இலக்கியம் எமக்கிவ் விரண்டும்
வாழ்க்கையின் பொருளா யமைந்தன,
ஈங்கெமக் காவன வேறெதும் இலையே!

குறிப்பு: சென்னியங்கிரி - சென்னிமலை; இது, கோவை மாவட்டத்துள் உளது. கரந்து, ஒடுங்கு, அரா என்க. ஊஞ்சல், மரப்பெயர்.

பேசும் தமிழ்

[திரு. சாமி]

ஒரு ஆங்கிலப் பேராசிரியர் தமிழிலக்கியததைப் பற்றி 'Illustrated weekly' என்ற இதழில் எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையில் தற்காலத் தமிழ் இலக்கியததைப் பற்றியும், கவிஞாகள் எழுத்தாளர்களைப் பற்றியும் தனது விருப்பு வெறுப்புக்கேறறவாறு எழுதியிருந்தார். பாடபுத்தகங்களில் காணபபடும் தமிழ் பேசும்தமிழிலிருந்து பெரிதும் வேறுபட்டு இருக்கிறது; இது இயற்கைக்கு முரணனது என்று குறை கூறியிருக்கிறுர். பேசும்தமிழையே பாடப புத்தகங்களில் கையாளுவதாக வைத்துக் கொள்வோம். 'யார்பேசும் தமிழைக் கையாளவேண்டும?' என்று கேட்பின் எனன விடை கொடுக்க முடியும? பேச்சுத் தமிழ் இடத்திற்கு இடம, இனததிற்கு இனம கூட மாறுபடுகிறது இந்நிலையில் 'யார் பேசுவதுபோல் எழுதுவது' என்று கேட்டால் 'ஏன் நான் பேசுவதுபோல், எனது அம்மாமி பேசுவதுபோல்' என்று சொல்ல முடியுமா? ஓரினத் தமிழ் வழக்கையோ, ஒரு மாவட்டத்தார் வழககையோ பாடப் புததகங்களில் வரவிட்டால நமது சிறுர்களின் தமிழ் என்ன ஆவது? ஒரு ஐம்பதாண்டுக்கு முன்னிருந்தோரைவிடத் தற்போதிருக்கும் மாணவர்கள் தமிழ்ப் பற்றும் விழிப்பும் கூடுதலாகப் பெற்றிருப்பதை நாம் பார்க்கிறேும். பேச்சுத்தமிழை எழுதும தமிழில் புகுததிவிட்டால அவர்களது தமிழ்ப்பற்றையும் தமிழையும் பாழடிப்பதாக முடியும் ஆதலின் பாடப் புத்தகங்களிலோ அல்லது பிற நூல்களிலோ காணப்படும் தமிழ் 'பொதுத் தமிழாக' இருக்கமுடியுமே தவிர, அவரவர் மனம்போன போக்கில் பேச்சுத்தமிழை நிரபபிவைத்ததாக இருக்க முடியாது. நல்ல பேச்சுவழக்குகளை எழுத்தில் நடமாட விடுவதில் குறையொன்றுமில்லை. ஆனுல் புரியாத வழக்குகளையும், தனிப்பட்ட வழக்குகளையும், கொச்சைச் சொற்களையும் எழுதும் தமிழில் எடுததாளுவது தமிழுக்கு ஊறு செய்வதாகும்.

பேசுவதுபோல் எழுதவேண்டும் என்று சொல்லும் சிலருடைய தமிழ், உண்மையில் பேசுவதுபோல் இருப்பதில்லை. அவர்கள் எழுதுவது, பேசுவதுபோல் எழுதவேண்டும் என்ற கொள்கைப் போர்வை மறைவில் வடமொழிச் சொற்களை வாரி இறைப்பதாகவே இருக்கிறது. பேசுவதுபோல் எழுதுபவர்கள் நடையை நான், குறைகூறுவதாக நினைக்கவேண்டா. உண்மையில் அந்த நடை (அவர்கள் நடையிலேயே) 'பூரண ஆகிருதியை

அடைந்து, அங்க பரிபூர்த்தியை எய்தி, ஆனந்த சரீரியாய், நூற்றுக்கணக்கான விவித வர்ணங்களுடன், அதிமனோகரமான 'ரூபவைசித்திரியம்' நிரம்பியதாகத் திகழலாம் அந்த நடை. தமிழணங்கின 'சௌலப்பியத்தை' உயர்த்தி 'அபராக்ரத சௌந்தர்ய' முடையவளாகச் செய்யலாம்! ஆனால் இவர்கள் நடையில் அள்ளி வீசப்படும் சொற்களைப் புரிந்துகொள்ள அகராதியைப் புரட்டவேண்டியிருக்கிறதே படித்தவர்களுக்கே அகராதியைத் துருவித் துருவிப் பார்த்தாலும் அச்சொற்களின் உண்மைப் பொருள் விளங்கவில்லையே இருந்தாலும் அவர்கள் பேசுவதுபோல்தான் எழுதுகிறார்கள்! அதைப்பற்றி ஐயமே இல்லை! இவர்கள் திரு வி. க. வின் நடையைப் போற்றுகின்றார்கள். ஆனால் எழுதும்போதோ அவர் நடையை மறந்து அதைத் தூற்றுவதுபோல எழுதுகிறார்கள். நடுநிலைமையோர் வேண்டும் நல்ல நடைக்கும், இந்த எழுத்தாளர்கள் நடைக்கும், 'அஜகாந்திர தூர' வேற்றுமை இருப்பதை யாவரும் அறிவர் 'அஜகஜாந்திரம்' என்ற மணியான சொல்லுக்குப்பொருள் என்னவென்று என்னைக் கேட்காதீர்கள். இந்த மணியான சொல்லைப் புரிந்து 'ரசிக்கும்' அளவு 'ரசிகமணி'யில்லை நான்! ஒருவேளை அஜகஜாந்திரத்திற்கும் அஜகஜத்திற்கும் (ஆடானை) ஏதாவது தொடர்பிருக்கலாம் என்று என் ஏழை மனம் இரண்டையும் முடிச்சுப்போட்டுப் பார்க்கிறது!

பேசும் தமிழுக்கும் எழுதும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பார்த்தோம். இனிப் பேச்சுத் தமிழ் மாவட்டத்திற்கு மாவட்டம் எப்படி மாறுகின்றதெனப் பார்ப்போம். திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களில் பேசும் தமிழுக்கும் ஆர்க்காடு மாவட்டங்களில் பேசும் தமிழுக்கும் மிகுந்த வேற்றுமை உண்டு. சோழநாடு, நாஞ்சில்நாடு, கொங்குநாடு ஆகிய பகுதிகளில் பேசும் தமிழ் மாறுபடுவதைக் காணலாம். சிறிதளவு என்பதை 'கொஞ்சூண்டு' என்பார் கொங்கு நாட்டார். 'இத்தனூண்டு' என்பாரும் உளர். 'ரவுண்டு' என்பார்கள் ஆர்க்காடுகளில் வாழ்வோர். 'துக்குனூண்டு' என்பார்கள் தஞ்சை மாவட்டத்தில். 'இத்தமத்தூண்டு' என்று கையைக் காட்டிச் சொல்லும் வழக்கும் உண்டு. பெண் பெரிசாகிவிட்டாள் என்று வழங்குகிறார்கள். தெற்கில் 'சமைந்துவிட்டாள்' என்பர். 'திரண்டுவிட்டாள்' என்று வடார்க்காட்டில் சில பகுதியில் வழங்குகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில 'பக்குவமாய்விட்டாள்' என்று சொல்வதும் உண்டு. புஷ்பவதியாய்விட்டாள் என்பர் சிலர். நாகரிகம் தெரிந்ததுபோல் சிலர் 'மேஜர்' ஆகிவிட்டாள் என்பர். வாணல் சட்டியைப் 'பாணல்' என்று வடார்க்காட்டில்

வழங்குவர் 'பொரிக்கஞ்சட்டி' என்று கொங்கு நாட்டில் வழங்கு வர். வறுக்கஞ்சட்டி என்பாரும் உளர். கன்றை ஈன்றவுடன் பெறும் பசும் பாலை 'சீம்பால்' என்பர் பலர். 'சின்னப் பால்' என் பர் தெற்கில் 'கடும்பால்' என்று வடார்க்காட்டில் வழங்குகின்ற னர் 'கடும்பு' என்று செட்டி நாட்டில் பயில்கிறது. (கெட்ட) நாற்றம் அடிக்கிறது என்பதை 'வீச்சம் அடிக்கிறது' என்பர் தெற்கில். 'கவுலடிக்கிறது' என்று சென்னையில் கூறுவர். 'கப் படிக்கிறது' என்பர் வடார்க்காட்டில். 'அதிகம்' என்ற சொற் பொருளில் 'கூடுதல்' என்று தெற்கில் வழங்குகிறார்கள். 'கொள்ளை' என்ற சொல்லும் அதே பொருளில் வழங்கப்படு கிறது. 'பணம் மிச்சமாயிருக்குது' என்ற வடார்க்காட்டு வழக் கில் 'மிச்சம்' அதிகம் என்ற பொருளில் வழங்குகிறது. 'எச்சா யிருக்கிறது' என்ற கொங்கு நாட்டு வழக்கில் 'எச்சு' (எச்சம்) எனும் சொல் அதே பொருளில் வழங்குகிறது.

விளக்கை அவித்துவிடு, அணைத்துவிடு என்பது பரந்து பட்ட வழக்கு. விளக்கைச் சின்னதாக்கு என்றும் சொல்லுவ துண்டு. 'விளக்கைக் குளிரவிடு' என்பது தெற்கில் வழங்கு கிறது 'விளக்கைப் பெரிதாக்கு' என்ற மங்கல வழக்கும் இதே பொருளில் பேச்சு வழக்கில் சில இடங்களில் பயில்கிறது. 'விளக்கை நூத்திவிடு' என்பர் வடார்க்காட்டில் வாழ்வோர். இச் சொல்லில் 'நூது' என்பது அடிச்சொல். 'நெய்யால் எரி நுதுப்பேம்' என்று குறளில் இச் சொல் பயில்வது வியப்புக் கிடமானது. குறளைத் தவிர வேறு நூல்களில் இச் சொல் வரு வதாகத் தெரியவில்லை. இச் சொல் வடார்க்காட்டில் பேச்சு வழக்கில் புகுந்து இருப்பது மிகமிக வியப்புக்குரியது. வெயில் காலத்தில் புழுக்கமாய் இருக்கின்றதென்கிறோம். உப்புசமாய் இருக்கின்றதென்பார் கோவை மாவட்டத்தில். உம்பலாயிருக் கின்றதென்பார் வடார்க்காட்டுப் பகுதிகளில். உம்பல் என்ற சொல் 'பெருகுதல்' என்ற அடிப்பொருளில் மன்னர் கால்வழி, யானை ஆகியவற்றைக் குறித்துச் சங்க நூற்களில் வழங்கியது. 'உப்புசம்' என்ற சொல் வயிற்றுக்கோளாறைக் குறித்துத் தென் னார்க்காட்டில் வழங்கும். உப்புசம், உப்புதல் ஆகிய சொற்கள் 'உம்பல்' அடியாகப் பிறந்தவேயாம். 'புழுக்கல்' எனும் சொல் சங்க நூற்களில் வெந்தவைகளைக் குறித்து வழங்கும் சோற்றை, ஊன் புழுக்கையும் குறித்து வருகின்றன. 'புழுங்கலரிசி' என்ப தும் இதே பொருளதே. 'துடைகாலிப் பயல்' என்பது ஒரு வழக்குச் சொல். 'போடுகாலன்' எனவும், 'ஆடுகாலன்' எனக் கொங்கு நாட்டிலும் வழங்குகிறது. 'விடுகாலிப் பெண்கள்' என்ற வழக்கில் வரும் 'விடு' எனும் சொல் 'தனி' என்ற

பொருளில் வழங்குகிறது. 'விடுகர்சு' என்ற பேச்சு வழக்கிலும் 'விடுபூ' என்ற இலக்கிய வழக்கிலும் 'விடு' என்ற சொல் பயிலகிறது. விடுபூவை உதிரிப்பூ வென்பர். உதிர்ந்த மாவால் ஆன பிட்டைக் கொஙகு நாட்டில் உதிரிப பிட்டு என்பர். செருப்பை 'நடையன்' என்பர் புதுக்கோட்டையில். புதை அரணம், மிதிதோல், தொடுதோல் என்பன இலக்கிய வழக்குகள் நீர்ப்புணாபபைத் 'தடுமம்' என்பா செட்டிநாட்டில். பசு பயிராதலே, பசு பலனுதல் என்றும வழஙகுவர். மேக மூட்டமாக இருக்கிறது, மங்குலாக இருக்கிறது, வானததில் மாசு இருக்கிறது,ஆகியவை ஒரு பொருள குறிதத பேச்சு வழக்குகள். மலிவாகக் கிடைக்கிறது என்பர். அதையே 'சல்லீசாகக கிடைக்கும' என்பர் தென்னாக்காடு மாவட்டத்தில். 'சஸ்தாவாக கிடைக்கும்' என்பர் வடார்க்காடு மாவட்டததில். 'சல்லீசாக' என்ற சொலலின் எதிர்ச்சொலலான 'வல்லீசாக' என்பது கொஙகு நாட்டில் வழஙகுகிறது. பதவிசாக, நறுவிசாக என்பனவும் தெரிந்ததே இமமுறையில் பேச்சுவழக்குகள இடத்திற்கிடம் மாறுபடுவதற்குப் பல எடுததுக்காட்டுகள் காட்டலாம். இடமஞசி விடுததனம.

சிறந்த பேச்சு வழக்குகள் பல உள அவைகளை எழுத்து நடையில கையாள்வது நல்லது. 'இசை கேடாக' மாட்டிக் கொண்டேன என்பது ஒரு சிறநத வழககு 'உஙக பிள்ளை மட்டும் ஓவியப் பிள்ளையா' என்று கொங்கு நாட்டில் வழஙகும் வழக்கு மிகச் சிறந்தது. 'அதிசயம, வியபபு' எனற பொருளில் இதே பொருளுடைய 'சிததிரம' என்ற சொல பெருங்கதையில் வழங்குவது கவனிககத்தக்கது சட்டி உடைநதுவிட்டால், அது 'வாய்ப்பாட்டில' உடையலாம். 'அலேயிலே' (பக்கவாட்டததில்) உடையலாம். 'நிலைக்குத்தாகவும' உடையலாம். அல்லது 'தூரில்' உடையலாம. 'வாயுள்ள பானைக்குத தூரிலே ஓட்டை' என்பது பழமொழி 'தூர்' அடியெனும பொருளிலும் அடியில் கிடக்கும அழுக்கெனும பொருளிலும் பயில்கிறது. ஓட்டை விழுந்துவிட்டது எனபதைத் 'தொண்டி விழுந்து விட்டது' என்பா வடார்க்காட்டில் 'சில் விட்டுவிட்டது' என்பர் கொங்கு நாட்டில். 'வடிவாக இருககிறது' என்ற ஈழநாட்டு வழக்குச் சிறந்தது இம்முறையில சிறந்த வழக்குகள் இருப்பதோடு சிறப்பறற வழக்குகளும உள பேசும் தமிழுக்கு எடுத்துக்காட்டாக வடார்க்காடு மாவட்டத்தில் வழஙகும தமிழை மட்டும் பார்ப்போம காரணம வடார்க்காட்டுப் பேச்சுத் தமிழ் அவ்வளவு சிறப்புடையது அல்ல வடாக்காடு தெலுங்கு நாட்டின் எல்லையைத் தழுவி உள்ளது. வடார்க்காட்டில்

தெலுங்கர்கள், மகமதியர்கள் செல்வாக்கு நிறைய உள்ளது. ஆதலின் அவர்கள் பேசும் தமிழ், சொற்களைப் பொறுத்த மட்டிலுமன்றி,ஒலியிலும் வேற்றுமைப்படுகின்றது. வடார்க்காட்டில் வடமொழி ஒலியுடன் சொற்களை ஒலிப்பதைக் காணலாம். இழுத்துக்கொண்டு என்பதை 'இஸ்துக்கொண்டு' என்றும், குதித்து என்பதை 'குஜ்சு' என்றும ஒலிக்கின்றார்கள் 'நாஸ்தா' சாபபிடுதல், 'சஸ்தாவா'க்கிடைததல் ஆகிய பிறமொழிச் சொற்களை வழங்குவதொடு தமிழ்ச் சொற்களையும் 'இஸ்புஸ்' ஒலியோடு வழஙகுகிறார்கள். குழம்பை 'சேர்வா' என்றும் விருந்தை 'தாவாத' என்றும் உருதுச் சொற்களைக் கொண்டு வழஙகுகிறார்கள்.

மற்றும் பேஜாராக இருக்கிறது, 'எல்லாம் திராப' திராணி இல்லை, 'டகுல் பாசசிபபயல' ஆகிய பல உருது தெலுங்குச சொற்கள் வழங்குவதைப் பார்க்கலாம். 'நூக்கித் தளளு' என்பதும முனையைக 'கொனை' என்பதும் தெலுஙகினால் வந்தது. 'ராவடி செய்தல' என்றசொல் 'அடாவடி' எனற சொல்லிலிருநது வநதிருக்கலாம். 'சடாக்கு, மா' முதலிய அளவைகளும இஙகுதான் வழங்குகின்றன. வீடு மூடிககிடக் கிடக்கிறது என்பதற்கு, 'வீடு ஓடிப்போயிருக்கு' என்று கூறுவதை வடாாக்காட்டில மட்டும தெரியக்கூடிய வழக்கு. இதுபோல் பல சிறப்பற்ற வழக்குகள் வடார்க்காட்டில் பயிலு கின்றன.

பேச்சுத்தமிழ் மாவட்டத்திற்கு மாவட்டம மாறுவதைப் பார்ததோம். மதத்திற்கேற்பவும சில மாறுகின்றன. சமைய லறை, சமையல் உள் எனபது அடுப்பங்கரை எனறு கொங்கு நாட்டில வழஙகுகிறது. கிறிததுவர்களில சிலா 'குசுனி' என்ற போர்த்துக்கல சொல்லை வழங்குகிறார்கள. முகமமதியர்க ளிடையே பல உருதுச்சொற்கள தமிழோடு விரவி வழஙகப் படுகின்றது பேச்சுததமிழ் இம்முறையில் இடத்திற்கிடம், சிறிதளவில இனம், மதம் ஆகியவைபற்றியும் மாறுபடுவதால் பேசும தமிழை எழுதும் தமிழாக்கும்போது மிகவும கவனிப் பாக இருக்கவேண்டும். எல்லாப் பேச்சு வழக்குகளையும் அப் படியே எழுதும் தமிழில் ஏற்றுவதென்பது தமிழ்க்கொலையாக முடியும.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) தூத்துக்குடியில் தமிழ் ஆட்சிமொழி மாநாடு

கடந்த 30—5—54-இல் திருஞானசம்பந்தர் திருமடத்தருகே அமைந்துள்ள சுந்தரப் பந்தலில் தமிழ் ஆட்சிமொழி மாநாடு நடைபெற்றது. ஓய்வுபெற்ற முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. ஆ. கசபதி நாயகர் அவர்கள் தலைமையேற்றார்கள். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க அமைச்சர் திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் தமிழ் மொழியின் சிறப்புபற்றியும், அது ஆட்சிமொழியாகவேண்டியதன் இன்றியமையாமைபற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் தமிழை ஆட்சிமொழியாக்குதல், தமிழ்நாட்டின் எல்லை வடவேங்கடம் தென்குமரி வரை சேர்த்தமைத்தல் பற்றிய தீர்மானங்களைத் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையாபிள்ளை, ஔவை சு. துரைசாமி பிள்ளை, வீர. சிவசுப்பிரமணியபிள்ளை ஆகியோர் வழிமொழிந்து சொற்பொழிவாற்ற மாநாடு இனிது முடிந்தது.

(உ) நெல்லையில் தமிழ் ஆட்சிமொழி மாநாடு

தென்னிந்திய தமிழ்ச்சங்கம், அருணகிரி இசைக்கழகம், சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் ஆகியவற்றின் சார்பில் கடந்த 31—5—54-ல் நெல்லை சந்திப்பு தருமபுர மடத்தில் தமிழ் ஆட்சிமொழி மாநாடு நடைபெற்றது. மாநாட்டுக்கு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. ஆ. கசபதி நாயகர் அவர்கள் தலைமை ஏற்றார்கள். தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை வரவேற்புரை வழங்க, இந்துக்கல்லூரிக்குழுச் செயலாளர் திரு. க. இராமசாமிக்கோனார் மாநாட்டைத் திறந்துவைக்க, திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், திரு. முத்துராமலிங்கத்தேவர், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, மற்றும் பல பெரியோர்கள் ஆட்சிமொழி தமிழே யாதல் வேண்டும் என்பதுபற்றிச் சொற்பொழிவாற்ற, அருணகிரி இசைக் கழகத்தார் 'தமிழ் ஆட்சி மொழியா?' என்னும் உரையாடலை நடத்திக் காட்ட மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பின்னர், வடவேங்கடத்தையும் தென்குமரியையும் எல்லைகளாகக் கொண்டு சித்தூர், நெல்லூர் ஆகிய மாவட்டங்களையும், தெற்கே திருவாங்கூர்-கொச்சி நாட்டிலுள்ள தமிழ் வழங்கும் பகுதிகளையும் உள்ளடக்கித் தமிழ் நாட்டை ஒரு தனி நாடாக ஆக்கும்படியும் ஆந்திரம் பிரிந்த தமிழ் நாட்டை '**தமிழ்நாடு**' என்றே அழைக்கும்படியும் இந்திய அரசியலாரை வேண்டியும், இலங்கைவாழ் தமிழர்களின் துயர் துடைக்க இந்திய அரசியலார் முன்வரவேண்டும் என வேண்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் இயற்றிய 'இளங்கோ' என்னும் நாடகத்தை அருணகிரி இசைக்கழகத்தார் திறம்பட நடித்துக் காட்டினர். வித்துவான் அ. க. நவநீதகிருட்டினன் அவர்கள் நன்றி கூற மாநாடு இனிது முடிந்தது.

குறிப்பு: தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும் என்று சென்னையிலே துவங்கிய முழக்கம், பெண்ணாகடம், தூத்துக்குடி, நெல்லை ஆகிய பலவிடங்களிலும் கேட்கவாரம்பித்துவிட்டது. மேலும் பல

மாவட்டங்கள் இம்முயற்சியில் முனைய ஆரம்பித்துள்ளன. இனியேனும் ஆட்சியாளர் தமிழ் ஆட்சிமொழியாகவேண்டிய இன்றியமையாமையை உணர்வார்களாக.

(௯) 'குமுதம்' கூற்றுப் பொருந்துமா? அது திருந்துமா?

அமுதம் அனைய தமிழ்மொழி ஆட்சிமொழியாதல் வேண்டுமென்பது உண்மைத் தமிழர்தம் உள்ளக்கிடக்கை. தமிழ் ஆட்சிமொழியானால்தான் தமிழர் வாழ்வு பெறுவர்—தமிழ்நாடு அதன் உண்மைச் சிறப்பைப்பெறும் இது தமிழரின் ஒன்றுபட்ட உணர்ச்சி. இவ்வுணர்ச்சியின் விளைவாகவே தமிழ் ஆட்சிமொழியாகவேண்டும் என்னும் எண்ணம் எழுச்சியாக ஆங்காங்கே தலைதூக்கக் காண்கிறோம்.

எனவே, ஆட்சிமொழி பற்றிய முயற்சியில் இனித் தமிழர் எத்துணை விரைவாக முன்னேறவேண்டுமோ அத்துணை விரைவிலே முன்னேறவேண்டும். இம்முயற்சியினை எதிர்ப்போர் இலர் என்றே சொல்லவேண்டும். ஒருசிலர் உண்டெனினும் அவர்களும் வெளிப்படையாக எதிர்க்கத் துணிந்திலர். இதழ்கள் யாவும் தமிழ் ஆட்சிமொழியாவதை வரவேற்கின்றன.

எனினும், ஒருசிலர் இயல்பாகத் தமக்குள்ள பிற்போக்குத் தன்மையை விட்டபாடில்லை. தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வதுபோற் காட்டி 'அவசரப்படக்கூடாது' என்று அறிவுரை கூற முன்வருகின்றனர். இதற்கோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது 'குமுதம்' என்னும் கிழமை இதழ். 1—6—54-ல் வெளிவந்த அவ்விதழ் கூறுவதைச் சற்றுக் கூர்ந்து நோக்குமின்:

"பஞ்சாயத்து நிர்வாகியின் வரிப்பாக்கி அறிவிப்பு முதல், சட்டசபை உறுப்பினரின் ஒழுங்குப் பிரசினைவரை, சகல நடவடிக்கைகளும் இன்று முதலே, இந்த விநாடி முதலே தமிழில் நடத்தப்படவேண்டும் என்று கிளர்ச்சி செய்வது அவசரப்புத்திக்கு அடையாளமாக இருக்குமே தவிர அறிவு முதிர்ச்சியின் சின்னமாக இருக்காது" என்று எழுதுகிறது.

'குமுத'த்தின் இக்கூற்று மிக மிக இரங்கத்தக்கது. இந்நாட்டில் ஆங்கில ஆட்சி நிலவிய காலையில் இக்கூற்றினைக் 'குமுதம்' வெளியிட்டிருக்குமாயின் அதில் சற்றேனும் பொருள் இருக்கமுடியும். நாடு விடுதலைபெற்று ஆண்டுகள் ஏழாகின்றன. இந்நாள் காறும் தமிழுக்கு ஏற்றமில்லையானால்—தமிழ் ஆட்சிப்பீடம் ஏற இயலவில்லையானால் விடுதலை என்ற சொல்லுக்கே பொருளில்லை. நாட்டுப்பற்றுக்கு அடிப்படை மொழிப்பற்று. நாட்டு விடுதலைக்கு அடிப்படை மொழி விடுதலை. ஏழாண்டுக் காலத்தில் இதனை நாம் காணமுடியவில்லையானால் தமிழரின் குரல் ஆட்சியாளர் செவிப் புகவில்லை, அல்லது தமிழை ஆட்சிமொழியாக்கத் தமிழர் தகுதியற்றவர் என்பதாக முடியும். எனவே, தமிழை ஆட்சி மொழியாக்க நாடு மடிதற்று நிற்கின்றதென்பதை இருண்டபோது மலரும் குமுதம் உணர்க. இனிக் குமுதம் போன்ற பிற்போக்குடைய இதழ்கள் நாட்டில் நெடுநாள் உலவ முடியாது. அது உலவவேண்டுமானால் இத்தகைய போலிக்கொள்கைகளை விட்டுவிட்டு உடனடியாகத் திருந்தவேண்டும்.

மதிப்புரை

உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்

இந்நூல் டர்பன், நெட்டால் "செந்தமிழ்ச்செல்வன்" ஆசிரியர் திருவாளர், கோ. இராமசாமி அவர்களால் எழுதப்பெற்றுளது. இவர்கள் '**தமிழ் வேதம், சிவபிரான் தோற்றம், சிவராத்திரி, சேத்தரின் சீவன்நிலை, உருவவணக்கம், ஊன்வீடு, அறம் முதல் ஓம் அல்ல, பிரார்த்தனைச் சுருக்கம்**' முதலிய பன்னூல் ஆசிரியர். திருமுறையும் சித்தாந்தமும் தென் தமிழ் நாட்டுக்கே உரிய சித்தாந்த சைவத்தின் திருமறை என்னும் திருவுளங் கொண்டவர். அந்நெறிக்குத் தொண்டாற்றுவதே பிறவிப்பயன் என்னும் அன்பு பூண்டவர். '**உலகெலாம்**' என்னும் தமிழ்மறை ஒன்றே முப்பொருள் உண்மை காட்டிச் செப்பும் திருவடி சேர்க்கும் என்னும் திடநம்பிக்கையுள்ளவர். இவ்வுண்மையைப் பன்னெடுங்காலமாகத் தென்னாப்பிரிக்கா முதலிய பல தேயங்களில் மெய்ப்பித்துக்காட்டிய பெரியார் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் திருமூலர் திருமொழியைக் கைக்கொண்டொழுகி ஒழுகுவிப்பவர்.

இந்நூற்கண் '**உலகெலாம்**' என்னும் திருப்பாட்டைப் பதினான்கு வகைப்படுத்தி இனிய எளிய நடையில் தெளிவுற விளக்கியுள்ளார்கள். '**சைவசித்தாந்தம்**' என்னும் பொருள்பற்றியும் விரிவாக விளக்கியுள்ளார்கள். இதனைக் கற்பார்க்குச் சைவசித்தாந்த மெய்ந்நெறி விளக்கமும் திருமுறைச் சித்தாந்த நுணுக்கமும் தெள்ளிதிற் புலனாம் என்பது உறுதி. முதற்பதிப்பு ஆயிரம் படிகளே அச்சிட்டுள்ளனர். அவைகள் தென்னாப்பிரிக்க அன்பர்களுக்கே சரியாயின. மீண்டும் விரைந்து அச்சிடுவார்கள் எனத் தெரிகிறது. நூலமைப்பு, தாள், அச்சு முதலியன மிகவும் செம்மை. ஆசிரியரவர்கள் நெடுந்தொலைவான சேய்நாட்டில் உறைந்தும் தாய்நாடு தாய்மொழி தாய்நெறி முதலியவற்றின்கண் பெருவேட்கையும் பேருறுதியும் கொண்டு ஓவாதுழைக்கும் ஒண்மை நனிமிகப் பாராட்டிப் பின்பற்றற்குரியது. புத்தகத்திற் காணப்பெறும் திருக்கோபுரம், திருக்கோவில், மன்னர் முதலிய உருவங்கள் ஆசிரியரவர்கள் நேரிற் சென்று நிழலோவியம் எடுத்தும் வரலாறுகள் உசாவியும் அமைக்கப்பெற்றன. இதன் பொருட்டு அவர்கள் எடுத்துக் கொண்ட ஆள்வினைத்திறன் அளத்தற்கரியது.

பொதுவாகச் செந்தமிழன்பர்களும் சிறப்பாகச் செந்நெறிச் செல்வர்களும் ஆசிரியரவர்கள்பால் பெருநன்றி பாராட்டும் பெருங் கடனுடையார். அவர்கள் அரும்பெரு நூல்கள் நம் நாட்டகத்தும் நிலவ நாம் வேண்டுவன செய்வோமாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.